பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
16 MAR 2005
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் –16 திருவள்ளுவர் ஆண்டு– 2036 பங்குனி–03 16–03–2005 புதன்கிழமை ஓசை 26


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பிடித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11456)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரிவினைவாதிகளுக்குத் துணை

## ஜே.வி.பி. பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச கூறுகிறார்

**இலங்கையில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரிவினைவாதிகளுக்குத் துணைபோகின்றன. எனவே அவற்றிற்கு அரச நிதி நடவழக்கை கள் தொடர்பில் கேள்வி கேட்க உரிமையில்லையென மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச்செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் இதனைத் தெரிவித்த ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அரசசர்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைத்திருக்கும் நிவாரணங்கள், தொகைகள் தொடர்பில் அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் 21ஆம் திகதி மக்களுக்கு அறிவுறுத்தும் கூட்டம் ஒன்றைக் கொழும்பில் நடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்த நிவாரணம் தொடர்பாக வழங்கப்படும் நிதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தவில் இரு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலி

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தப் பிரதேசத்திலுள்ள ஹரபொல கிராமத்தில் நேற்று நள்ளிரவு இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அதே கிராமத்தைச் சேர்ந்த எஸ்.செல்வநாதன் (வயது 22) மற்றும் சுப்பிரமணியம் குணசேகரம் (வயது 21) என்போரே அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களது வீட்டிற்குச் சென்ற ஆயுதபாணிகள் கதைக்க வேண்டும் எனக்கூறி வெளியே அழைத்துச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைகள் குறித்து வெலிகந்தப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(32)

## அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

பாலியல் வல்லுறவு சம்பந்தப்பட்ட முறைப்பாட்டிற்கமைவாக நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றில் இடம்பெற இருந்த அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்காம் திகதி இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய அகதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வரும் 26ஆம் திகதி போராட்டம் நடத்துவர்

### -ஐ.தே.க. பா.உ. வஜிர அபேரட்ண

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்வரும்26ஆம் திகதி வீதியில்இறங்கிப் போராட்டம் நடத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேரட்ண தெரிவித்துள்ளார். அரசாங்கம் கடற்கரையிலிருந்து 100மீற்றர் தூரத்திற்குள் கட்டடங்களை அமைக்கும் திட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அவர் உரையாற்றினார். இதன்போது கருத்துக்கூறிய அவர் அரசாங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

ஜெயசிக்குறு நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த போது நேற்று முன்தினம் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர்-நவக்குமார்

(கதிரவேலு-சந்திரமோகன் சாமிப்புலம் நல்லூர் பூநகரி மன்னார்) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. மேற்படி சந்திப்பானது இன்று காலை 8.30 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (கு)

## கடற்படையினர் கைது செய்த இருமீனவர்களும் விடுதலை

கடந்த சனி இரவு மீன்பிடிக்கச் சென்றவேளை கடற்படையால் கைது செய்யப்பட்ட வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இரு மீனவர்களும் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் பருத்தித்துறைப் பொலிசாரினால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களின் வள்ளமும் வலைகளும் கையளிக்கப்படுமென பருத்தித்துறைப் பொலிசார் கூறினர். (27)

## பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பில் காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை

### -கொழும்பு தினசரி செய்திக்கு நோர்வே தூதரகம் மறுப்பு

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் நேற்று வெளியாகியுள்ள செய்தியை நோர்வே மறுத்துள்ளது. கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகப் பேச்சாளர் கே.ரொம்ஸ்ட்டால் இதனை மறுத்துள்ளார். ஆழிப்பேரலைக்குப் பின்னா பாதிக்கப்பட்ட இடங்களைப் புனரமைப்பதற்கு அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. இதற்கமைய பொதுக்கட்டமைப்பு தொடர்பில் நோர்வே செயற்றிட்டம் ஒன்றை வகுத்து வருகிறது. இந்த நிலையில் நோர்வேயும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இது தொடர்பில் அரசாங்கததிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் செய்தி ஒன்றை நேற்றைய ஆங்கில நாளிதழ் வெளியிட்டிருந்தது. அதில் அரசாங்கம் பொதுக்கட்டமைப்புத் திட்டத்திற்கு எதிர்வரும் ஏப்பிரல் மாதத்துக்குள் இணங்காவிடின் போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் விலகிக்கொள்ளக் கூடும் என்ற செய்திவெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் நோர்வேத் தரப்பினர் அரசாங்கத்திற்கு உத்தியோக பூர்வமற்ற ரீதியில் அறிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இதனை மறுத்துள்ள நோர்வேத் தூதரகப் பேச்சாளர் இது பிழையான தகவல் எனக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றைஅமைக்க நோர்வே தொடர்ந்தும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இந்தச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான காலக்கெடு விதித்த எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை என கே.ரொம்ட்டால் தெரிவித்துள்ளார். (32)

## சேனைக்குடியிருப்பில் த.பு.கழகத்தால் தற்காலிக குடியிருப்புகள் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சேனைக்குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டிமுடிக்கப்பட்ட தற்காலிக குடிமனைகளைக் கொண்ட மற்றுமொரு குடியிருப்பினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் மக்களிடம் கையளித்துள்ளது.

கடந்த 26.12.2004 இல் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முகமாகவும், பொருத்தமான வாழ்விடங்களை அமைத்துக்கொடுக்கும் முகமாகவும் அம்பாறை மாவட்டத்தில் எட்டு இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துவருகிறது. அதன் தொடர் வேலைத்திட்டச் செயற்பாடாக சேனைக்குடியிருப்பில் அமைக்கப்பட்ட இடைக்காலக் குடியிருப்பினை மக்களுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் வீ.இராஜேந்திரம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளர் வாசுதேவன் , கிராம சேவகர் எஸ்.அருள்ராசா, கிராம சேவகர் எஸ்.மோகன் , அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர்.குடியிருப்பின் பெயர்ப்பலகையை தமிழர் புனர் வாழ்வுக்கழக

(12ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

இல 135, ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு.தொடர்புகளுக்கு:- ஆ.நடராசன் (JP) இல. 166, ஜெயந்திநகர். விலைபேசித்தீர்க்கப்படும். (5854)

### பொய்கை

டிஜிற்றல் அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், புகைப்படங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல், கணினி, தட்டச்சு, பக்கவடிவமைப்பு, ரென்சில் கட்டிங், சீடி றைற்றிங் மற்றும் கணினிப் பதிப்புக்கள்போன்ற கணினி வேலைகளை விரைவாகச் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.பொய்கை, டிப்போவீதி, கிளிநொச்சி. (5856)

# இராமநாதபுரத்தில் வீரமுரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம், கல்மடுநகர் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், வீரமுரசு நிகழ்வும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களும், இராமநாதபுரம் மகாவித்தியாலத்தில் தவறாது கலந்துகொள்ளும் படி வேண்டப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாவீரரின் திருவுருவப் பட(ங்களு)ம் நாளை மறுதினம் பாடசாலையில் வைத்து நினைவு கூருவதால் தவறாது மாவீரர்களின் திருவுருவப் படங்களையும் பாடசாலையில் ஒப்படைக்கும்படிகோரப்பட்டுள்ளது. இரவு கலைநிகழ்வுகளும்இடம்பெறும்.(12)

# பொன்னம்பலம் மருத்துவமனையில் நாளை மூட்டு சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நாளை என்புமூட்டு சம்பந்தப்பட்ட நோய்களுக்கான ஆலோசனைகளும், சத்திரசிகிச்சைகளும் நடை பெறவுள்ளன.

காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை மேற்படி மருத்துவமனையில் வைத்து என்பு, மூட்டு நோய்களுக்கான ஆலோசனைகளும், சத்திர சிகிச்சைகளும் நடைபெறவுள்ளதால் பயன் பெற விரும்புவோர் குறிப்பிட்ட தினத்தில் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும் வண்ணம் நிர்வாகத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

(சோ)

# கரைச்சிப் பிரதேச செயலக நடமாடும் சேவை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக்காணி அலுவலகத்தினால் நடமாடும் சேவைகள் மூலம் தற்காலிக காணி அனுமதிப்பத்திரமாக மாற்றிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நாளை அக்கராயன் கோணாவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்துக்காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை கோணாவில், யூனியன் குள கிராம மக்களின் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தரக்காணி அனுமதிப் பத்திரங்களாக (எல்.டி.ஓ) பொமிற் மற்றும் காணி அனுமதிப் பத்திரம் அற்ற காணி உரிமையாளர்களுக்கு தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே அன்றைய தினம் மேற்படி காணி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களை தகுந்த ஆவணங்களுடன் சமூகமளிக்கும் வண்ணம் கரைச்சிபிரதேச செயலக காணிஉத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

(சோ)

# உப்பள தொழிற் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்

ஆனையிறவு உப்பள ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இடம் பெறவுள்ளது.

ஆனையிறவு உப்பள ஊழியர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக இலங்கை வர்த்தக தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலதம்பு அவர்கள் தொழில் ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய விடயம் தொடர்பாகவும் கூட்டத்தின் போது எடுக்கப்பட்டதீர்மானங்கள் தொடர்பாக இக் கூட்டத்தில் தெரியப்படுத் தப்படவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைமாலை 2.30 மணியளவில் பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்திலும் அரியாலை லங்கா உப்பு லிமிட்டெட் காரியாலய மண்டபத்தில் 25 ஆம் திகதி காலை 9.00மணிக்கும் கூட்டங்கள் நடைபெறும்.

சகல ஆனையிறவு உப்பள ஊழியர்களும் தங்களுடைய ஆவணங்களின் மூலப்பிரதி நிழற்பிரதிகளுடன், சமூகமளிக்குமாறு ஆனையிறவுகிளைச்சங்க செயலர் வே.சுந்தரலிங்கம் வேண்டியுள்ளார்.

(12)

### விவசாயக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணி(க்)கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவே இக் கூட்டத்துடன் தொடர்புடைய சகலரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பன்றிகளால் தொல்லை

யாழ். தென்மராட்சி மட்டுவிலில் உள்ள விவசாய நிலங்களில் பிரவேசிக்கும் பன்றிக் கூட்டங்கள் அங்கு பயிரிடப்பட்டிருக்கும் பயிர்களை நாசம் செய்வதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

இவ்வாறான பன்றிகளின் தொல்லைகளால் தமக்கு நாளாந்தம் ஆயிரக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். (33)

### மகோற்சவம்

வட்டக்கச்சி மாயவனூர் திருக்குழல்லுடன் மாதுமை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். (12)


# பணிநிலை வேண்டுகை

உற்பத்திப் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டு கைகள் கோரப்படுகிறது.

பணிநிலை :- - உற்பத்தி பணியாளர்.

அடிப்படை உதவுதொகை :-7000/-

கல்வித்தகமை:- ஆண்டு 8 வரை கற்றிருத்தல் வேண்டும்

அகவை -18-35 வரை

(ஆண்,பெண் இருபாலாரும்)

குறிப்பு:- உணவு, தங்குமிடவசதிகள் இலவசமாக ஒழுங்கு செய்து தரப்படும்.

மேற்படி பணிக்கு விரும்புபவர்கள் எதிர்வரும் 18-03-2005 வெள்ளிக் கிழமை அன்று காலை 9-30 மணிக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-
வசீகரன் கட்டடப்பொருள் தொழிலகம்.
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
பூங்காவனச்சந்தி,
முரசுமோட்டை. (சி.11395)

# பணிநிலை வேண்டுகை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு கீழ்க்காணும் பணி நிலைக்கு உரியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அலுவலக நிர்வாக உத்தியோகத்தர்

தகுதி:-
அரச, அரசசார்பற்ற நிறுவனத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தல் வேண்டும்.

வைத்தியர் விடுதிப்பராமரிப்பாளர்/காவலாளி (இரவு)

நற்பண்பாடும், பழக்கவழக்கமும் உடைய மேற்படி பதவிக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமைகள்:-
வயது :- 20-45
கல்வி :-8ஆம் ஆண்டிற்கு மேல்
வதிவிடம் :-கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவர் எனின் முன்னுரிமை வழங்கப்படும்.
தங்கிநின்று வேலை செய்யக் கூடியவரெனின் தங்குமிடமும், உணவுவசதியும் செய்து தரப்படும்.

கணக்காய்வாளர் (ஆண்கள்)

தகைமைகள்:-
கணக்காய்வில் பயிற்சி முடித்து 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்
ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி - 25-03-2005**

விண்ணப்பம் அனுப்பும் முகவரி:-
A9, பிரதான வீதி,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
கிளிநொச்சி.

இதற்கான வேதனக் கொடுப்பனவுகள் நேர்காணலின் போது கலந்துரையாடி முடிவு செய்யப்படும்.

நிர்வாகப் பணிப்பாளர்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்

(5858)


# சாவு அறிவித்தல்

## கணேசன் ஞானலெட்சுமி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சிவநகர் இல.63 ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் ஞானலெட்சுமி அவர்கள் 13.03.2005 காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணேசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா, சின்னம்மா தம்பதிகளின் மகளும், யோகலிங்கம் (இந்தியா), கமலகுமார், காந்தரூபன், கோமதி, சோதிமதி (லண்டன்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), புவனேசன் (பிரான்ஸ்), யசோதா (இந்தியா), கைலைசன், சுஜோதா ஆகியோரின் அன்புத்தாயாரும், விஜயலட்சுமி (இந்தியா), இன்பராசா, சற்குணராசா, மகாலிங்கம், சிவனேசன் (லண்டன்), தர்சினி(ஜேர்மனி), தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேவராசா, குகேந்திரராசா (பிரான்ஸ்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பதி,வசந்தா (பிரான்ஸ்), தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.03.2005 வியாழன் காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் உருத்திரபுரம் பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்

(5859)

## மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு; மருத்துவ பீடம் செயலிழந்தது

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் அனைவரும் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்ததைத் தொடர்ந்து மருத்துவ பீடத்தின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன.

மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் சத்திரசிகிச்சைக்கான விரிவுரைகளை நடத்தக்கோரி கடந்த வாரம் முதல் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இந்நிலையில் இறுதியாண்டு மாணவர்களுக்கு ஆதரவாக ஏனைய ஆண்டு மாணவர்களும் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்துள்ளமையால் மருத்துவபீட செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன. (41)

## யாழ்.பல்கலை துணைவேந்தரை கடமைக்குச் செல்லவிடாது தடுப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றைய தினம் துணைவேந்தரை அலுவலகத்திற்கு கடமைக்கு செல்ல விடாது தடுத்தனர்.

துணைவேந்தரை அலுவலகக் கட்டடத்திற்கு முன்னால் வைத்து மருத்துவ பீட மாணவர்கள் தமது கோரிக்கைகளுக்கான பதிலைத் தரும்படி கேட்டே கடமைக்குச் செல்லவிடாது தடுத்தனர்.

இதனால் பல்கலைக் கழக வாயிலில் கொளுத்தும் வெயிலில் நீண்ட நேரம் துணை வேந்தர் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது (41)

## மருத்துவ பீடாதிபதி நேற்றுப் பதவி விலகல்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி நேற்றுத் தனது பீடாதிபதிப் பதவி விலகல் கடிதத்தை துணைவேந்தரிடம் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் தமது சத்திரசிகிச்சைப் பயிற்சி நெறியினை நடத்தக்கோரி இரண்டாவது வாரமாக விரிவுரைகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு சென்ற உபவேந்தர் நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகம் திரும்பியதைத் தொடர்ந்து மருத்துவபீடாதிபதி தனது பீடாதிபதிப் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## எமது மக்கள் குடியிருப்புக்களிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்

— யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலைய சமாசம்

(யாழ்ப்பாணம்)

**எமது குடியிருப்புக்களிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு எமது மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டுமென யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

வலிகாமம் வடக்கிலிருந்து சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படையினரால் வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்கள் இனியும் சிறிலங்கா அரசை நம்பியிருக்க முடியாது.

பதினைந்து வருட காலமாக அனுபவித்து வரும் துன்பங்களையும், துயரங்களையும் மேலும் சுமக்க எம்மால் முடியாது.

இந்த அரசின் எம்மீதான அசமந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என சமாசம் மேலும்தெரிவித்துள்ளது. (33)

## — யாழ். போதனா வைத்தியசாலையில் —
## புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் இடவசதி போதாதுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சை களுக்கென தனியானதொரு சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் இதற்கென ஒதுக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் இடவசதி போதாதுள்ளது.

இதனால் இங்கு சிகிச்சைக்காக வருவோரை தங்கவைத்து சிகிச்சையளிப்பதில் பல நெருக்கடிகள் காணப்படுவதாகவும், இதனால் பல நோயாளர்கள் உடனுக்குடன் வீடுகளுக்கு அனுப்பப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் கடந்த மாதமே முதன் முதலாக புற்றுநோய் சிகிச்சைக்கென தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்கதக்து. (33)

## — சுனாமியால் பாதிக்கப்பட்ட —
## அறுபது இந்து ஆலயங்களைப் புனரமைக்க இந்து கலாச்சார அமைச்சுக்கு அக்கறையில்லை

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் யாழ்.குடாநாட்டிலுள்ள அறுபது இந்து வணக்கஸ்தலங்களுக்கும் அவற்றின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ள போதும் இந்து கலாச்சார அமைச்சு இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என இந்து அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபது சிறிய மற்றும் பெரியளவிலான இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலர்பிரிவில் 37 இந்து ஆலயங்களும் அவை சார்ந்த நிறுவன அமைப்புக்களும் சேதமடைந்துள்ளன.

காரைநகர்தெல்லிப்பழை ஊர்காவற்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு ஆலயம்சார் அமைப்புக்களும் சேதமாகியுள்ளன.

எனினும் இது குறித்து அக்கறை செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்காது இந்து கலாச்சார அமைச்சு இருந்து வருவதாக இந்து அமைப்புக்கள் பலவும் குற்றம் சாட்டுகின்றன. (33)

## நெடுந்தீவுப் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்

(நெடுந்தீவு)

யாழ். தீவகத்திலுள்ள நெடுந்தீவு பிரதேசத்தின் வீதிப் போக்குவரத்து மற்றும் சுகாதாரம், சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றின் அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மேற்படி பகுதியில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## ஆசிரியர் நியமனம் பெற்றவருக்கு தீவகத்தில் முன் சேவைப் பயிற்சி

(தீவகம்)

தீவகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் தீவகக் கல்வி வலயமும் இணைந்து புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கு முன்சேவைப் பயிற்சியினை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வேலணை வைத்தியலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்தில் இப்பயிற்சி இடம்பெறவுள்ளது.

## பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக்கண்காட்சிப் போட்டி

(கொக்குவில்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி எதிர்வரும்23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் தமது கண்காட்சிப் பொருட்களை 22 ஆம் திகதி பிற்பகல்2.00 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (33)

## மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் · பிரிவில் வாழ்ந்து வரும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் தமது விபரங்களைப் பதிவு செய்து உறுதிப்படுத்துமாறு வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம் அறிவித்திருக்கின்றது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் தொடர்பான மீளாய்வுப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காகவே இவ்வாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (33)

## பாதிக்கப்பட்டோருக்கு அரசின் சமுர்த்தித் திட்டத்தால் பயனில்லை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சமுர்த்தித்திட்டத்தினால் மக்களுக்கு திருப்திகரமான பயன்கள் ஏதும் கிடைக்கவில்லையென பொதுமக்கள் தரப்பிலிருந்து கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் தற்போது சகல கிராமங்களிலும் சமுர்த்தித்திட்டம் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இத்திட்டத்தின் மூலம் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் எதுவிதமான பயனையும் அடையவில்லை.

மாறாக இத்திட்டத்தினடிப்படையில் பொதுமக்கள் சுரண்டல்களுக்கும் ஆளாவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. (33)

## முக்கிய கலந்துரையாடல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான தேசிய பாதுகாப்பு செயற்றிட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது.

இதில் மனித உரிமை ஆர்வலர்களைப் பங்குபற்றி மேற்படி செயற்றிட்டம் தொடர்பான கருத்துக்களை முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (33)

## பட்டப்பின் டிப்ளோமா அரையாண்டுப் பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புப் பீடத்தின் பட்டப்பின் டிப்ளோமாக் கற்கை நெறிகளான குடித்தொகை அபிவிருத்தி, பொது நிர்வாகம் ஆகிய பாடங்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை இம்மாதம் 19 ஆம் திகதியும் ஏப்பிரல், மாதம் இரண்டாம் திகதியும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தோர் தமக்கான பரீட்சை அனுமதி அட்டை,நேர அட்டவணை என்பவற்றை உயர்பட்டப்படிப்புப் பீடத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## தொழில்நுட்பவியல் நூல்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினரால் ஒரு தொகுதி தொழில்நுட்பவியல்சார் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்நுட்பம்சார் நூல்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்குடனும் இங்கு பயிலும் மாணவர்களது தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடனும் இவை வழங்கப்பட்டுள்ளன.

இதில் மேலைத்தேய தொழில்நுட்ப முறைகள் சார் அறிவியல் நூல்கள் அடங்குகின்றன. (33)

## உயர் திருவிழா

புங்குடுதீவு அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி அடுத்த மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.எட்டாம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். ஒன்பதாம் திகதி நற்கருணை விழா இடம்பெறும், அடுததநாள் திருவிழா அன்று திருப்பலிப் பூசையும், தேர்ப்பவனியும் அன்னதானமும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த வங்கி உதவியாளர் ஆட்சேர்ப்புப் பரீட்சை (மக்கள் வங்கி) தவிர்க்க முடியாத காரணத்தினால் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள யாழ்.புனித கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

-கிளிநொச்சி நகரில் பிரதேச சபையினரால்-

# வீதி விதிமுறைகளுக்கு புறம்பாக அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் அகற்றும் பணி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

**ஏ-9 நெடுஞ்சாலையின் 66 அடி அகலத்திற்குட்பட்டுள்ள தற்காலிக வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.**

கரைச்சி பிரதேச சபையினர் ஏ -9 நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் வீதிக்குரிய 66 அடிக்குட்பட்ட பகுதியிலுள்ள தற்காலிக கொட்டகைகளை அகற்றி வரும்



அதே வேளை நிரந்தரக் கட்டடங்களின் தாவாரங்களையும் அகற்றி வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பிரதேச சபையினர் இவற்றை அகற்றுமாறு வாணிபர்களுக்கு பகிரங்கவேண்டுகோள் விடுத்திருந்தும் உரியவர்கள் அவற்றை கவனத்திலெடுக்காததையடுத்து பிரதேச சபையினரே நேரடியாக இப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் இச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ள கரைச்சி பிரதேச சபையினர் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியிலுள்ள அனைத்து வாணிப நிலையங்களிலும் வீதியின் 66 அடிக்கு உட்பட்ட பகுதியிலுள்ள தாவாரங்கள் தற்கால கொட்டகைகள், விற்பனைப் பொருட்களை அகற்றுமாறும், வீதிப் போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகளைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளனர். (ச)

# சாரதீய அனுமதிப் பத்திரத்திற்கான செயன்முறைப் பரீட்சை எப்போது?

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உந்துருளி ஓட்டுநர்களுக்கான சாரதீய அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை நடைபெற்று நான்கு மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையிலும் அதற்கான செயல்முறைப் பரீட்சை இதுவரை இடம்பெற வில்லை. இதன் காரணமாக உந்துருளி ஓட்டுநர்கள் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் பயணிக்கும் போது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.

சாரதீய அனுமதிப் பத்திரம் பெறும் பொருட்டு கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உந்து ருளி ஓட்டுநர்கள் கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்ததனைத் தொடர்ந்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 13,14ஆம் திகதிகளில் விண்ணப்பதாரிகளுக்கான எழுத்துப் பரீட்சை இடம்பெற்று எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களது பெயர் விபரங்களும் திணைக் களத்தால் வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பின் வெகுவிரைவில் சித்தியெய்தியவர்களுக்கான செயல் முறைப் பரீட்சை நடைபெறுமென உதவி ஆணையாளர் அலுவலகத்தினரால் தெரிவிக்கப் பெற்றிருந்தபொழுதிலும் அதற்கான பரீட்சை இதுவரை இடம் பெறாத காரணத்தினால் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்திய உந்துருளி ஓட்டுநர்கள் சாரதீய அனுமதிப் பத்திரத்தினை பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் பயணிக்கும் போது பாரிய சிரமங்களை எதிர் நோகக வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (சோ)

## வறிய கிராமங்களிற்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்க ஏற்பாடு

(பூநகரி)

பூநகரியிலுள்ள வறிய கிராமங்களான லெப். கேணல் விக்ரர் குடியிருப்பு மிதுசன், கௌதாரிமுனை, அரசபுரம் செக்காலை ஆகிய கிராமங்களிற்கு பூநகரி அரசியல் துறையினரால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே கடந்த ஐந்தாம் திகதி சீதா குடியிருப்புக்கு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (34)

## சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தித் திட்டத்தில் பதினொரு கிராமங்களில் கடமையாற்றும் கிராம திட்ட அலுவலர்கள், சமூக உணர்வூட்டாளர்கள், கிராம தொண்டர்கள் ஆகியோருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சமூக ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறி அண்மையில் பாரதிபுர கிராம பொது மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட இணைப்பாளர் க.ரவிக்காந் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சுடர் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வே.கெங்காதரன், பாரதிபுர சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ.இராமலிங்கம், நிகொட் திட்ட சமூக உணர்வூட்டாளர்களுக்கான இணைப்பாளர் றூபா ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை பாரதிபுர ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்புமாறன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து கிளிநொச்சி நிகொட் திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் செல்வி. துஸ்யந்தி, கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வே.கெங்காதரன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கான பயிற்சியினை சமூக உணர்வூட்டாளர்களுக்கான இணைப்பாளர் செல்வி றூபா வழங்கினார். இந் நிகழ்வில் 33 பயிற்சியாளர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை மாநாடு ஏப்பிரல் 30இல் நடத்த தீர்மானம்

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சந்திப்பு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதி ஐயா தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் 2005ஆம் ஆண்டு வேலைத் திட்டம் தொடர்பாகவும், தேசிய எழுச்சிப் பேரவை கட்டமைப்புத் தொடர்பாகவும், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா கருத்துக்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணண் சமகால அரசியல் நிலை பற்றி விளக்கமளித்து அதற்கேற்ப வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான கருத்துக்களை வழங்கினார். மேலும் தொடர்ச்சியாக சங்கம நிகழ்வுகளை கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டு எதிர்வரும் ஏப்பிரல் 30ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட ரீதியான தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாடு நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது. தேசிய எழுச்சிப் பேரவையின் உப செயலாளரின் நன்றியுரையுடன் கலந்துரையாடல் முடிவடைந்தது.

-வவுனியாப் பகுதியில்-

## தேவையின்றி வீதிகளில் கூடி நிற்கும் இளைஞர்கள் மீது நடவடிக்கை

வீதிகளில் தேவையில்லாமல் கூடி நின்று மாணவிகள், பெண்களுக்குத் தொல்லை கொடுக்கும் இளைஞர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் விசேட பணிப்புரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிசார் தெரிவித்தனர். கடந்த வாரம் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக மாலை 7 முதல் 7.30 மணிவரையிலான வேளையில் தனியார் கல்வி நிலையங்கள், முக்கிய சந்திகள் என்பவற்றில் கூடி நின்றதாகக் கூறப்படும் 25 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொலிஸ் பிணையில் விடப்பட்டு மறு நாள் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியாவில் முக்கிய சந்திகளிலும், கல்வி நிலையங்களுக்கு எதிரிலும் கூடி நிற்கும் இளைஞர்கள் மாணவிகள், பெண்களிடம் சேட்டை விட்டு தொல்லைகள் கொடுத்து வருவதுடன், கோஷ்டிகளாக இணைந்து வன்முறைகளிலும் சமூக சீர்கேட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இம் முறைப்பாடுகளைத் தொடர்ந்து இத்தகைய இளைஞர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 17 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதுடைய 25 இளைஞர்களையும் அவர்களுடைய பெற்றோர்களின் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி வரும் 31 ஆம் திகதி இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். கண்ணில் தென்பட்ட இளைஞர்களைப் பொலிசார் கைது செய்ததாகவும் மருந்து வாங்கச் சென்ற ஒருவரையும் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஹோட்டலுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் இருக்கின்றதா என எட்டிப்பார்த்த ஒருவரையும், பொலிசாரைக் கண்டதும் காரணமின்றி ஓட முயன்றவர்கள் மற்றும் தேவையில்லாமல் கூடிநின்றவர்களுடன் சேர்த்துக் கைது செய்துள்ளதாக சட்டத்தரணிகள் மூலமாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் போது தவறு ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவித்த நீதிபதி, இது குறித்து விசாரணைகளின்போது விசேட கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார். அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் தெருக்களில் கூடி நிற்பவர்களுக்கும், கோஷ்டிகளாக இணைந்து செயற்படுபவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகப் பொலிசார் தெரிவித்தனர் (21)

## எள்ளுக்காடு கிராமத்தில் கடன் வழங்கும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தில் எள்ளுக்காடு கிராமத்தில் கிராம மக்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வு உருத்திரபுரம் எள்ளுக்காடு பொது மண்டபத்தில் சங்கத் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் வே.கெங்காதரன், அரசசார்பற்ற இணையங்களின் பொறுப்பாளர் இ.கணேசபிள்ளை, பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிராம சேவையாளர் ஐ.வைத்தீஸ்வரன் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் வி.அருள் ஏற்றி வைத்தனர்.இந் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட இணைப்பாளர் க.ரவிக்காந் திட்ட விளக்கத்தினையும், அரசசார்பற்ற இணையத் தலைவர் கணேசபிள்ளை எமது மக்கள் தாமாக தமது சுய தொழிலை ஆரம்பித்து முன்னேற்றமடைவதற்கு இது ஒரு முக்கியமான நிகழ்வு என்று தனது சிறப்புரையில் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து கிராம சேவையாளர் ஐ.வைத்தீஸ்வரன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். இந்நிகழ்வில் கடன் கொடுக்கும் நிகழ்வு ஆரம்பமானது. இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர். வே.கெங்காதரன் மரக்கறிப் பயிர்ச்செய்கை பயனாளிகள் ஒன பது பேருக்கு 10,.000 ரூபா வீதம் 90,000இதற்கான காசோலை வழங்கியும் இ.கணேசபிள்ளை நீர் இறைக்கும் இயந்திரம் இரு பயனாளிகளுக்கு 30.000 ரூபா வீதம் 60.000 ரூபாவிற்கான காசோலையினையும் அரசியல் துறைப் பொறுப்பானர் போர்ப்பிரியன் நான்கு பயனாளிகளுக்கு பசு வளர்ப்பிற்கு 48,000 ரூபாவிற்கான காசோலையினை வழங்கியும் சிறு வியாபாரத்திற்கு நிகொட் திட்டப் பொறியியலாளர் செந்தூரன் எட்டுப் பயனாளிகளுக்கு அதற்கான காசோலையினையும வழங்கினர். இக கடன் திட்ட நிகழ்வில் 23 பயனாளிகளுக்கு கடன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)



இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயலகத்தினா முதன் முறையாக ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நவீன பிரதியாக்கல் இயந்திரம் ஒன்றினை கிளி. மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினிடம் கடந்த வியாழனன்று கிளி . மாவட்டசெஞ்சிலுவைச் சங்கத்தில் வைத்து கையளித்தனர். மேற்படி இயந்திரம் கையளிக்கப்படுவதனை படத்தில் காணலாம்.

(படம்- சோதி)

# தாய்வான் தனிநாடாகப் பிரகடனம் செய்யின் அதன் மீது போர்தொடுக்க சீனாவில் சட்டம்

(பீஜிங்)

**தாய்வான் தனி நாடாக பிரகடனம் செய்தால் அதன்மீது போர் தொடுக்க அனுமதி வழங்கும் பிரிவினை வாதத்தடுப்புச்சட்டம் சீனப்பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

சீனப் பாராளுமன்றத்தின் வருடாந்திர தொடரின் 10 நாள் கூட்டத்தில் இறுதிநாளான நேற்று முன்தினம் இந்தச்சட்டம் அரசாங்கம் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சட்டத்துக்கு மூவாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தனர். அதைத் தொடர்ந்து இந்தச் சட்டம் நிறைவேறியது.

சீனாவை ஒன்றிணைக்கவும் தாய்வான் சுதந்திரப்பிரகடனம் செய்தால் அதன்மீது போர் தொடுக்கவும் இந்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச்சட்டம் தாய்வான் மீது தாக்குதல் நடத்துவதற்கு இராணுவத்துக்குச் சட்டபூர்வ அனுமதி அளிக்கிறது. இந்தச்சட்டம் தாய்வான் மக்களுக்கு எதிரானதோ அல்லது போருக்கான சட்டமோ அல்ல என்று சீனப்பிரதமர் வென்ஜியா பாவோ கூறினார்.

தாய்வானில் உள்ள பிரிவினை வாத சக்திகளைக்கட்டுப் படுத்துவதற்காகத்தான் இந்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்று அவர் கூறினார்.

இப்படி ஒரு சட்டம் இயற்றியதற்காக சீனாவுக்கு தாய்வான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதற்காக அதுபெரும் விலையை கொடுக்கவேண்டி இருக்கும் என்று தாய்வான் கூறியுள்ளது.

இதேவேளை இச்சட்டத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ள அமெரிக்காவும், யப்பானும் இந்தச்சட்டத்தை திரும்பப்பெறும்படி சீனாவைக் கேட்டுக்கொண்டுள்ளன. 1949 ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுப்போரைத் தொடர்ந்து இரண்டு நாடுகளும் தனித்தனி நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகின்றன. தாய்வான் சீனாவுடன் இணையவேண்டும் என்று சீனா வலியுறுத்தி வருகிறது. 1979ஆம் ஆண்டு வரை தாய்வானை தனி நாடாக அங்கீகரித்த அமெரிக்கா அதை ஐ.நா. சபையில் உறுப்பினராகவும் சேரவைத்தது. சீனாவுடன் புதிதாக நட்புறவை அமெரிக்கா ஏற் படுத்திக்கொண்டதும், சீனாவுக்கு ஐ.நா. பாதுகாப்புச்சபையிலே இடம் வாங்கிக்கொடுத்ததோடு ஐ.நா.வில் இருந்து தாய்வானை விலத்திவிடச் செய்தது இருந்தபோதிலும் தாய்வான் ஆதரவாளராகவும், ஆயுத விநியோகராகவும் அமெரிக்கா தற்போதும் இருந்து வருகிறது.



தெற்கு ஈராக்கில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களைக் கண்டுபிடித்து கொண்டு செல்லும் அமெரிக்க கடற்படையினர்.

## அமெரிக்க திரையரங்குகள், பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்த அல்-ஹைய்தா திட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள திரையரங்குகள், பாடசாலைகள், விடுதிகள் மீது தாக்குதல் நடத்த அல்-ஹைய்தா தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது.

ஈராக்கில், அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தி வரும் தீவிரவாதிகளுக்குத் தலைவனாக இருப்பவர் அபுமுசாப் அல் ஜர்க்காவி. இவர் அல்-ஹைய்தாவின் கூட்டாளி ஆவார். ஈராக்கில் தாக்குதல் நடத்தி வரும் நீங்கள் இந்தத் தாக்குதலை அமெரிக்காவில் நடத்த வேண்டும் என்று அல்-ஜர்க்காவியை அல்-ஹைய்தா தலைவர் பின்லேடன் கேட்டுக் கொண்டுள்ளார். அத்தோடு ஈராக்கில் உள்ள அல்-ஹைய்தா பிரிவுக்கு அல்-ஜர்க்காவியை தலைவராகவும் பின்லேடன் நியமித்துள்ளார்.

இதனையடுத்து அமெரிக்காவில் உள்ள திரையரங்குகள் , பாடசாலைகள், விடுதிகள் மீது தாக்குதல் நடத்த அல்-ஜர்க்காவி திட்டமிட்டு இருக்கிறார் என்றும் அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. பாதுகாப்புக்காக அமெரிக்கா கோடிக்கணக்கில் செலவழித்த போதிலும் அமெரிக்க விமானப் போக்கு வரத்து தாக்குதலுக்கு ஏதுவானதாக உள்ளது. வர்த்தக ரீதியிலான விமானங்களை விட உலங்குவானூர்திகள், வாடகைக்குப் பறக்கும் விமானங்கள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு குறைவு அவற்றை தீவிரவாதிகள் எளிதில் கடத்த முடியும் என்றும் அமெரிக்க உளவுத்துறை தயாரித்த 24 பக்கரகசிய அறிக்கையில் தெரிவிததுள்ளது.

இதே வேளை இந்தத் தகவல் நம்பகத் தன்மை வாய்ந்தது என்று வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்டீவன் ஹட்லி தெரிவித்து இருக்கிறார்.

அல்-ஜர்க்காவி குழுவைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் இராணுவத்திடம் பிடிபட்டார். அவனிடம் விசாரணை நடத்திய போதுதான் இந்தத் தகவல் தெரிய வந்தது.

"போதுமான அளவு பணம் இருந்தால் லஞ்சம் கொடுத்து அமெரிக்காவுக்குள் நுழைந்து விடமுடியும்" என்று ஜர்க்காவி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.



*பிலிப்பைன்சில் மனிலா சிறையை உடைத்து கைதிகள் வெளியேறுவதையடுத்து எழுந்த கலவரத்தில் கண்ணீர்புகை பிரயோகத்திலிருந்து தப்பிக்க வெளியேறும் பொலிசார் இச்சம்பவத்தில் 17 கைதிகள் துப்பாக்கி வேட்டிற்குப் பலியானார்கள்.*

## அணுவாயுத களஞ்சியசாலையை வடகொரியா வலுப்படுத்தும்

**-வடகொரிய வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர்**

வடகொரிய அரசாங்கம் அணுவாயுத களஞ்சியசாலையை வலுப்படுத்துமென அந்நாட்டின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் வலுச்சமநிலையை பேணுவதும் அமெரிக்காவின் தாக்குதல்கள்களை சமாளிப்பதும் இதன் நோக்கமாகும் என அமைச்சின் பேச்சாளர் செய்தி நிறுவனம் ஒன்றிற்குப் பேட்டியளிக்கும் போது தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி எம்மிடம் அணுவாயுதம் உள்ளதாக வடகொரியா பிரகடனப்படுத்தியது. நமது நாடு தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் கொண்டுள்ள வெறுப்புக்களின் மத்தியில் ஆயுதங்கள் அவசியப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை வடகொரியாவை ஊடுருவும் எண்ணம் கிடையாது என அமெரிக்கா கூறுகின்றது.

## விரல்களை வெட்டி ஜப்பானுக்கு எதிர்ப்பு

(சியோல்)

ஜப்பானை எதிர்த்து நடந்த போராட்டத்தின் போது தென்கொரியாவைச் சேர்ந்த இரண்டு பேர் தங்களது கைவிரல்களை கத்தியால் வெட்டி எதிர்ப்பை தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜப்பான்- கொரியா இடையேயான கடல் பகுதியில் டோக்டோ, டேக்ஷிமா என்ற இரண்டு குட்டித் தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகளுக்கு ஜப்பானும், தென்கொரியாவும் சொந்தம் கொண்டாடி பல ஆண்டுகளாக சண்டை போடுகின்றனர்.

இந் நிலையில் டோக்டோ ஜப்பான் உரிமை கொண்டாடுவதை கைவிட வேண்டுமென வலியுறுத்தி சியோலிலுள்ள ஜப்பான் தூதரகம் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜப்பானுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியும் ஜப்பான் நாட்டு தேசியக் கொடியை எரித்தும் ஆர்ப்பாட்டம் செய்தனர். காலணி ஆதிக்க நாடாக ஜப்பான் உள்ளது. டோக்டோ தீவு மீது உரிமை கொண்டாடுவதை ஜப்பான் நிறுத்த வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர் கோஷமெழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 67 வயதுடைய பார்க்கியூங்ஜா என்ற பெண்ணும், 40 வயது சோசியூங்கியூ என்பவரும் ஆவேசமாக தங்களது கைவிரல்களை கத்தியால் வெட்டி எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இவர்கள் இருவரையும் பொலிசார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

தென்கொரியாவுக்கான ஜப்பான் தூதர் தற்போது டோக்கியோ சென்றுள்ளார். இந்தத் திடீர் போராட்டம் குறித்து அவர் உயரதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருவதாக ஜப்பான் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நேபாள மன்னரை எதிர்த்து ஐந்து கட்சிகள் ஆர்ப்பாட்டம்

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவை எதிர்த்து முக்கிய அரசியல் கட்சிகள் மீண்டும் போராட்டத்தில் குதித்துள்ளதால் அரசியல் சூழ்நிலை மேலும் இறுக்கமாகியுள்ளது.


நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை பிரதமர் ஷெர் பகதூர் துபா தலைமையிலான அரசு கட்டுப்படுத்தவில்லை என்று கூறி மன்னர் ஞானேந்திரா நெருக்கடி நிலையை அமுல் படுத்தினார். அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் சிறையில் அடைக்கப்பட்டனர். மன்னர் ஞானேந்திராவுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில் அங்குள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

மன்னரை எதிர்த்துப் போராட்டம் நடத்துபவர்களை ஒடுக்குவதில் நேபாள பொலிசாரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேபாள காங்கிரஸ் தலைமையில் ஐந்து முக்கிய கட்சிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன. கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் இந்த ஐந்து கட்சிகளும் மொத்தமாக 190 இடங்களைக் கொண்டிருந்தன. காத்மண்டு நகரின் பழைய சந்தைப் பகுதியான அசான் பஜார் அருகே கட்சிக் கொடிகளோடு வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும்படி கட்சித் தொண்டர்களுக்கு உத்தர விடப்பட்டிருந்தது.

ஆனால் அந்த இடத்தைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அதிரடிப்படை பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். நெருக்கடி நிலை அமுலில் இருக்கும் போது ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்க மாட்டோம் எனப் பொலிசார் கடும் எச்சரிக்கை விடுத்தனர். அதையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த தொண்டர்களை பொலிசார் கைது செய்தனர். மன்னர் ஞானேந்திராவைக் கண்டித்து கடந்த வாரமும் இதேபோல பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*நேற்று யப்பானிய இலத்திரனியல் நிறுவனம் ஒன்றில் காட்சிக்கு விடப்பட்ட சிறு குழந்தையைப் போன்ற (றோபோ) இயந்திர மனிதன். இது பல்வேறு பணிகளை செய்யக் கூடியது வானிலை முன் அறிவிப்பையும் செய்யக்கூடியதாகும்*



## 07

➡ கொடிகாமம் அரசியல்துறை செயலகத்தினுள் படையினர் அத்துமீறி புகுந்து அட்டகாசம் செய்தனர்.

➡ படகுகள் கட்டுமானத் தொழிற் பயிற்சி நிலையம் கிளிநொச்சியில் திறப்பு.



➡ கேணல். கிட்டு ஞாபகார்த்த தேசிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 2005 ஆம் ஆண்டிற்கான வெற்றிக்கிண்ணத்தை மன்னார் மாவட்ட புனிதசென்ஜோசப் அணி கைப்பற்றியது.



➡ இனந்தெரியாதோரால் ஆரையம்பதியில் இராணுவ உளவாளி சுட்டுக்கொலை.

➡ சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் உதவிகளை சமமாகப் பகிர்வதற்கு புலிகளுடன் அரசு இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த் வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெரேரோ வோல்ட்னர் சனாதிபதியிடம் தெரிவிப்பு.

➡ அண்மையில் யாழ்ப்பாணத்தில் இராணுவ உழவு இயந்திரம் மோதி பாடசாலை மாணவி பலியான சம்பவத்திற்கும், படையினரால் வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாணவர் சமுகத்தினர் கண்டனப் பேரணியில் ஈடுபட்டனர்.

## 08

➡ ஆழிப் பேரலையால் பாதிப்புக்குள்ளான மருதமுனை மக்கள் வீடமைப்பிற்கான வசதிகளை வழங்கக்கோரி கல்முனை பிரதான வீதியில் கூடாரங்கள் அமைத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



➡ சர்வதேச மகளிர் தினம் தமிழர் தாயகப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்துடன் வெளிநாடுகளிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.



➡ முல்லைத்தீவு உண்ணாப்புலவு எனும் இடத்தில் 130 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளைக் கொண்ட மற்றுமொரு குடியிருப்புத்திறப்பு.

## 09

➡ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவின் ஐரோப்பாவிற்கு பயணம்.



➡ புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இரண்டு மென்ரக விமானங்களைக் கொண்டு கொழும்பின் அரைவாசி இடங்களை அழிக்க முடியுமென பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பில் எதிர்வு கூறினார்.

➡ அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சந்தித்து கிழக்கில் தொடரும் வன்முறைகள், ஆழிப் பேரலை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

➡ ஜேர்மன் மருத்துவ குழுவினர் யாழ்.விஜயம் செய்து சிகிச்சையளித்தனர்.

➡ மட்டக்களப்பு புற நகர்ப் பிரதேசமான இருதயபுரத்தில் மதுபான விற்பனை நிலையமொன்றின் உரிமையாளர் சுட்டுக்கொலை.





## 10

➡ ஜே.வி.பி. உறுப்பினர்களும், சிங்கள தேசியவாத அமைப்பினரும் இணைந்து உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



➡ இந்தியக் கடற்படைக் கப்பல்கள் மூன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.



➡ யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன் சந்திப்பு இதன் போது அண்மைக்காலமாக குடாநாட்டு மக்கள் மீது அதிகரித்து வரும் இராணுவ நெருக்கடிகள் உடனடியாக தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென கோரினார்.

➡ துன்னாலையில் கலிகைச் சந்திப் பகுதியில் வீடொன்றிற்குச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்ளும் நோக்குடன் நடந்து கொண்டதையடுத்து மக்களுக்கும் - படையினருக்குமிடையே பெரும் மோதல் இடம்பெற்றது.

➡ யாழ்.நீர்வேலிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரை சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்ததையடுத்து இராணுவத்தினருக்கும், மக்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

➡ சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஆறு தாக்குதல் விமானங்கள் பாகிஸ்தான் விமானப்படையினரால் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் திருப்பி கையளிப்பு.

➡ புலிகளின் குரல் நடுவப்பணியக அமலன் அரங்கில் கேணல்.கிட்டு அவர்களின் 12 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும், சிறப்பு முத்தமிழ் கலையரங்கும் இடம் பெற்றது.




➡ நோர்வே வெளியுறவு அமைச்சர் செயலகத்தில் நோர்வே பிரதிநிதிகளுக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினருக்குமிடையே சந்திப்பு இடம் பெற்றது. சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புக் குறித்து நோர்வேத்தரப்பால் முன்வைக்கப் பட்டுள்ள வரைவை ஏற்றுக்கொண்டுள்ளோம் என சந்திப்பின் பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு. இதற்கு முன்னர் நோர்வேயின் சிறப்புத் தூதுவரைச் சந்தித்தனர்.




## 11

➡ தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய "போரும் சமாதானமும்" எனும் ஆங்கில நூல் கனடா "ஸ்காபரோ" நகரசபை மண்டபத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது.




➡ வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன் பற்று வடக்கில் 60 இடைக்கால குடிமனைகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்று திறந்து வைப்பு.

➡ சாவகச்சேரியில் இராணுவ ரக் வண்டி உந்துருளியில் வந்தவரை மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளை படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையே பெரும் கலவரம் மூண்டது.



➡ ஆழிப்பேரலையால் தமது குடியிருப்புக்களை இழந்த மக்களுக்காக உடுத்துறை மற்றும் தாளையடி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட 134 வீடுகள் கையளிப்பு.



## 12

➡ மன்னாரில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும், அரசியல் துறையினருக்குமிடையே சந்திப்பு இடம் பெற்றது.

➡ யூ.கே.ரெக் நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்திற்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்பு.

➡ மக்கள் மீதான படையினரின் தாக்குதலைக் கண்டித்து சாவகச்சேரியில் மக்கள் இரண்டாவது நாளாகவும் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



➡ சுனாமி நிவாரண உதவிகளை விநியோகிப்பதில் இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கான விருப்பத்தை அரசும்-புலிகளும் தெரிவித்துள்ளனர் என நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் ஒஸ்லோவில் புலிகளைச் சந்தித்த பின்னர் தெரிவிப்பு.

➡ அமெரிக்கா சென்றிருந்த "பேபி 81" எனப்படும் அபிலாஷ் என்ற குழந்தை பெற்றோருடன் கொழும்பு திரும்பியது.

➡ பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் உதவிப்பணிகளில் அரசு செயற்படும் விதத்தைக் கண்டித்து திருமலையில் மகாதிலுவேவ விகாரையின் விகாராதிபதி தனது சீடர்களுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

## 13

➡ மட்டக்களப்பு ஆரையம்பதிப் பிரதேச செயலக வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த சுனாமி நிவாரணப் பொருட்கள் மக்களால் கண்டெடுப்பு. கொதிப்படைந்த மக்கள் போராட்டம் நடத்தினர்.

➡ இரண்டாவது நாளாகவும் திருமலையில் பிக்குகளின் போராட்டம் இடம் பெற்றது.

➡ சுன்னாகத்தில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

# பேரினவாதிகளின் "வெள்ளைப் புலிகள்"

உலகவங்கியின் கொழும்பு வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை 'வெள்ளைப்புலி' யென முத்திரை குத்தி நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான முயற்சியில் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகள் முனைப்புடன் இறங்கியுள்ளன. இந்நடவடிக்கைக்கு பீற்றர்ஹரோல்ட் இலங்கையின் ஐக்கியத்துக்கும், இறைமைக்கும் மாறாகப் பேசியுள்ளதோடு, பிரிவினைக்கு ஆதர


பீற்றர் ஹரோல்ட்

வாகச் செயற்படுகின்றார் என்பதே பேரினவாதிகளின் விளக்கமாகும்.

இவ்வாறு பேரினவாதிகள் போடும் கூச்சலுக்கு, அண்மையில் கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்றிற்கு பீற்றர் ஹரோல்ட் வழங்கிய பேட்டியில் கூறிய சில விடயங்களே காரணமாகும். அவர் அப்பேட்டியில் "உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஒரு வகையிலான உத்தியோகப் பற்றற்ற அரசு இருக்கின்றது என்ற உண்மைப் பிரகாரமும், அரசாங்கத்துடனானபோர்நிறுத்த ஒப்பந்தத்தில் அது ஒரு தரப்புஎன்பதாலும், சட்டப்படியான பங்குதாரராக இருப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு தகுதி உண்டு." என்றும் கூறியமை தொடர்பாகவே பௌத்த பேரினவாத சக்திகள்தற்பொழுதுபீற்றர் ஹரோல்ட் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றிவிடுதல் என்பதில் முனைப்புடன் களத்தில் குதித்துள்ளன.

இத்தனைக்கும், பீற்றர் ஹரோல்ட் தான் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியானது திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பேட்டியில் இடம் பெற்றுள்ள சில வார்த்தைகளைத் தான் பிரயோகிக்கவில்லையெனவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இது ஒரு புறம் இருக்க, பீற்றர் ஹரோல்ட் கூறியதாக வெளியான தகவலில் தவறு ஏதும் உண்டா? என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில் சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து கொண்டுள்ளது. விடுதலைப்புலிகளைச் சமபங்காளிகளாக ஏற்று பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியுள்ளது. இவை கடந்த அரசாங்கத்தின் போது நடந்தவையாகத் தற்போதைய அரசாங்கம் தட்டிக்கழித்து விடவும் முடியாது. ஏனெனில் யுத்த நிறுத்த உடன்பாடு இன்னமும் அமுலிலுள்ளது. முன்னைய உடன்பாட்டில் எதுவித மாற்றமும் செய்யப்பட்டதாகவும் இல்லை.

இவை ஒரு புறம் இருக்க பீற்றர் ஹரோல்ட் கூறியிருப்பது போன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோக பற்றற்ற அரசு ஒன்று இருக்கின்றது என்பதை எவருமே நிராகரித்து விட முடிய்யாது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கென ஒரு சிவில் நிர்வாகமும், காவல்துறை, நிதித்துறை; நீதித்துறை, அரசியல்துறை உட்பட பல்வேறு துறைகளுமுள்ளன. அதுமட்டுமன்றி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசிப்பவர்கள் சோதனைச் சாவடியில் அனுமதி பெற்றாக வேண்டும்.

இதேசமயம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி தனித்துவமான நிர்வாகக் கட்டமைப்புடன் கூடியது என்பதை சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளும், தெளிவுபடுத்துபவையாகவே உள்ளன.விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் செல்வோர், அங்கிருந்து வருவோர் இராணுவச்சோதனைச் சாவடியில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பொதிகளைச் சோதனையிட அனுமதிக்க வேண்டும். அதாவது ஒரு அரசிற்குள் ஆயின் இப்பதிவுகளும், சோதனைகளும் ஏன்? எல்லைப் பகுதிபோன்றுநடவடிக்கை ஏன்?


ஆகையினால் பீற்றர் ஹரோல்ட் கூறினாரோ, இல்லையோ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தனிப்பட்ட அரச நிர்வாகம் ஒன்று நிலவுகின்றதென்பதும், அங்கு தனித்துவமான நிர்வாகம் ஒன்று உள்ளதென்பதும் வெளிப்படையானதொன்றே. ஆனால் இக்கள யதார்த்தத்தைமறந்தே பீற்றர் ஹரோல்ட் மீது பேரினவாதிகள் சீறிப்பாய்கின்றனர்.

ஆனால் அடிப்படையில் அவரின் கூற்றுக்களில் இருந்த "தனியரசு" என்பது மட்டும்தான் சிங்களப் பேரினவாதி சீறிப் பாய்வதற்குக் காரணம் அல்ல.

இதற்கப்பால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க 600 கோடி ரூபாய்களை உலக வங்கி செலவிடவுள்ளதாகவும், இந் நிதி விடுதலைப் புலிகளின் கலந்தாலோசனையுடன் அரச முகவர் நிலையங்களுக்கூடாக செலவிடப்படும் எனக் கூறியமையே பேரினவாதிகள் பீற்றர் ஹரோல்ட் மீது சினங்கொண்டதற்கு மற்றுமொரு காரணமாகும்.

அதாவது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பெரும் தொகை நிதியை உலக வங்கி செலவிடுவதற்குப் பீற்றர் ஹரோல்ட் காரணமாகியுள்ளார் என்பதே அவர்களின் சீற்றத்திற்கு அடிப்படையாகும். ஆனால் இத்தகைய தொரு சீற்றத்தை பேரினவாதிகள் வெளிப்படுத்துவதானது ஒன்றும் அதிர்ச்சிக்குரியதல்ல.

ஏனெனில், சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு உடனடியாக வெளிமாவட்டங்களில் இருந்து அனுப்பப்பட்ட நிவாரணப்பொருட்களையே சூறையாடிய பேரினவாத சக்திகளுக்குப் பெரும்தொகை நிதியை வடக்கு-கிழக்கில் செலவிடுதல் என்பது எவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தக்கதொன்றாக இருக்கும்?




இந்நிலையிலேயே பௌத்த-சிங்களப் பேரினவாத சக்திகள் உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி மீது சீறிப்பாய்ந்துள்ளனர். ஆனால் இது ஒரு உதிரியான நிகழ்வல்ல. அதாவது, சிங்களப் பேரினவாத சக்திகள் இவ்உலக வங்கிப்பிரதிநிதியின் செயலுக்கு மட்டும் தான் இவ்வாறு ஆட்சேபம் தெரிவிக்கின்றனர் என்பதல்ல. இதே போன்று பலர் மீது இத்தகைய ஆட் சேபங்களை பௌத்த-சிங்கள அடிப்படைவாத சக்திகள் எழுப்பியமையும், அவர்களை ஆட்சியாளர்கள் இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றுகின்றமையும், சிறிலங்காவில் வழமையான நடவடிக்கைகள் ஆகியுள்ளன.

இந்த வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் இருவர், கொழும்பு வதிவிடப்பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியப்பிரதிநிதி ஒருவர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதிய கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி ஒருவர் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஒருவர் ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேசமயம் இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்காற்றிய நோர்வேயின் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் அவர்களும், மற்றும் விசேட தூதுவராகப் பணியாற்றி வரும் எரிக்சூல்ஹெய்ம் அவர்களும், சிறிலங்கா அரசால் வெளியேற்றப்பட்டவர்ளாக அன்றி விரும்பத தகாதவர்களாக இருந்தவர்கள் என்பதும், அவர்களை இராஜதந்திர நடவடிக்கை மூலம் வெளியேற்ற அரசாங்கம் முற்பட்ட தென்பதும்ஏற்கனவே அறியப்பட்டதகவல்களே. இவர்கள், ஐ.நா.செயலர் கோபி அனானைக்கூட விட்டு வைத்ததாக இல்லை.

அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயலாற்ற முற்பட்ட சர்வதேச நிறுவனங்களின், அரசுகளின் பிரதிநிதிகள் எப்பொழுதும் சிறிலங்காவிற்கு வேண்டப்படாதவர்களாக, சிறிலங்காவில் விரும்பப் படாதவர்களாக இருந்துள்ளனர் என்பதே உண்மையானதாகும். ஆகையினால் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திலும் சரி, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளிலும்சரி ஈடுபடுபவர்கள் இதனைப்புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

சிறிலங்காவில் விரும்பப்படாதவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பொதுவில் பௌத்த-பேரினவாத அமைப்புக்களின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டு - அவை இனவாத ஊடகங்களூடாக மக்களிடம் சென்றடைந்து பின்னர் அரசாங்கம் அதனைப் பொறுப்பேற்று இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் முனைப்புப்படுத்தி இவற்றை முடித்து வைப்பதே வழமையானதாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாகமுன்னாள் நோர்வே தூதுவர் ஜோன்வெஸ்பேர்கை வெளியேற்ற அரசாங்கம் மேற்கொண்ட வழிமுறைகளும், உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை வெளியேற்ற மேற்கொண்ட வழிமுறைகளையும் அவதானிப்பின் புரிந்துகொள்ளலாம்.

நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் சிறிலங்கா அரசிற்கும்-விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்பாடுஏற்படுவதற்குப் பெரும் பங்காற்றியவர். ஆனால் அவர் சிறிலங்காவில் சந்தித்த அவமானங்களும், அவமதிப்புக்களும் ஏராளம் என்றே கூறலாம்.

ஆரம்பம் முதலே ஜோன்வெஸ்பேர்க் சிங்களப் பேரினவாத சக்திகளின் கண்டனங்களுக்குள்ளாகி இருந்தார். இதிலுள்ள வேடிக்கை என்னவெனில் இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு சனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்த போதும், அவரது அரசாங்கத்தில் அன்று பிரதம மந்திரியாக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க போன்றவர்கள் ஜோன்வெஸ்பேர்க்கை அவமானப்படுத்த முனைந்தமையாகும். ஒரு தடவை நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்முடன் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்திக்கநோர்வேதூதுவர்வெஸ்பேர்க் சென்ற போது அவரை ரட்ணசிறி விக்கிரமநாயக்க கண்டுகொண்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை? போகும்போது வரவேற்கவும் இல்லை, திரும்பும்போது குட்பாய் சொல்லவும் இல்லை.

ஆனால் எவ்வாறு இருப்பினும் வெஸ்பேர்க் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்குப் பெரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். இருப்பினும்,விடுதலைப்புலிகள் வானொலி உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள உதவினார் என்று பௌத்த-சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் கூச்சலிட்டதைத் தொடர்ந்து தனது பதவிக்காலத்தை நீடிப்புச் செய்து கொள்ளாமல் ஜோன் வெஸ்பேர்க் வெளியேறினார்.

சிறிலங்கா அரசைப் பொறுத்து விரும்


ஜோன்வெஸ் பேர்க்.

பப்படாதவர்களை வெளியேற்றுதல் என்பதில் மூன்று சக்திகள் முனைப்புடன் செயற்படுவதை அவதானிக்க முடியும். அதாவது பௌத்த-சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களோ அன்றி பௌத்த-சிங்களப் பேரினவாத ஊடகங்களோ இவ்விவகாரத்தை முதலில் கையில் எடுத்துக்கொள்ளும். இதில் ஊடகங்கள் முதலில் தொடங்கின் அடிப்படைவாத அமைப்புக்கள் அவற்றை ஊதிப்பெரிது படுத்தும், பௌத்த-சிங்கள அடிப்படைவாத அமைப்புக்கள் தொடங்கின் ஊடகங்கள் அவற்றை ஊதிப்பெரிது படுத்தும். இதன் பின்னர் அரசாங்கம் அதனைக் கையில் எடுத்து விவகாரத்தை முடிவிற்குக் கொண்டுவர இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஆனால் ஊடகமோ அன்றி அடிப்படைவாத அமைப்புக்களோ விவகாரத்தைக் கையில் எடுக்கும் போதே இது அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனான நடவடிக்கை என்பதும் வெளிப்படுத்தப்பட்டு விடுவதாகவுமே இருக்கும். ஒருவகையில், அரசாங்கத்தில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களில் ஒருவரோ அன்றிச் சிலரோ விவகாரங்களை ஆரம்பிக்கும் அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்றவர்களாகவே இருப்பர்.

இந்த வகையில் பீற்றர் ஹரோல்ட் தொடர்பான சர்ச்சையை ஊடகங்கள் உருவாக்கி பௌத்த-சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களிடமும்-பேரினவாத அரசியல்வாதிகள் இடமும் ஒப்படைத்துள்ளன. இவர்கள் தற்பொழுது பீற்றர் ஹரோல்டிற்கு வெள்ளைப்புலி எனப் பட்டம் சூடியுள்ளனர். இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக அரசாங்கம் இனி இராஜதந்திர முயற்சிகள் மூலம் ஹரோல்ட்டை வெளியேற்ற முற்படுதல் கூடும்.

அதாவது சிறிலங்காவைப் பொறுத்து ஆட்சியாளர்கள் மட்டும் பௌத்த-சிங்கள நலன்விரும்பிகளாக, இனவாதிகளாக இருந்துவிட்டால் போதாது. சிறிலங்காவில் பணிபுரிய வரும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் என்பவர்களும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் கொள்கை, கோட்பாடுகளை ஆதரிப்பவர்களாக இருக்க வேண்டும். அதாவது இன ஒடுக்குமுறைக்கு அனுசரித்துப்போபவர்களாகவும் ஆதரவளிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அனுசரணை புரிபவர்களாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது விடில் அவர்கள் இலங்கையின் இறைமைக்கும், ஐக்கியத்துக்கும் ஊறு விளைவிப்பவர்களாகவே நோக்கப்படுவார்கள். இதன் இறுதிக்கட்ட நிகழ்வாக அவர்கள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டியவர்களாக அன்றி வெளியேற்றப்படுபவர்களாக இருப்பார்கள்.

-ஜெயராஜ்

# இயற்கை அனர்த்தத்தினால் செயலிழந்துபோன முன்பள்ளிகளை இயங்க வைக்க தீவிர முயற்சி

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் வடக்கு கிழக்கில் ஐந்து மாவட்டங்களில் இயங்கிவந்த முன்பள்ளிகள் மிக மோசமான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதோடு, முற்றாக அழிவடைந்துமுள்ளன. இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டுப்பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட முன்பள்ளிகளின் மீள் செயற்பாடுகளிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனடிப்படையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கிவரும் இதே வேளை சுனாமி அனர்த்தத்தில் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்கள், சிறார்களை நினைவுகூரும் நிகழ்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு இதன்போது சாவடைந்த இருபத்தைந்து முன்பள்ளி ஆசிரியர்களின் குடும்பங்களுக்குத் தலா 15,000 ரூபா வீதம் உதவித் தொகையினையும் வழங்கிவருகின்றனர். மட்டக்களப்பில் ஆறு ஆசிரியர்களும், அம் பாறையில் 14 ஆசிரியர்களும், முல் லைத்தீவில் இரண்டு ஆசிரியர்களும், வடமராட்சியில் ஒரு ஆசிரியரும், திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் ஒரு ஆசிரியரும் சுனாமியால் சாவடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. அத்தோடு சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்டுவரும் இடைத்தங்கல் முகாம்கள் ஒவ்வொன்றிலும் முன்பள்ளிகளும் அமைக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நான்கு ஈழத்தமிழர் தலைமன்னார் வருகை

(மன்னார்)

தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம் திருப்பந்தூர் அகதி முகாமில் வசித்த நான்கு இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் தலைமன்னார் திரும்பியுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் தலைமன்னார் பொலிசார் மூலம் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களை மன்னார் நீதிபதி எம்.எம்.அப்துல்லா அவர்கள், அவர்களின் சொந்த இடமான தலைமன்னார் பியரிற்கு மன்னார் நகர கிராம உத்தியோகத்தர் மூலம் அனுப்பிவைத்தார். (18)

# புதுக்குடியிருப்பில் வீதிகள் சீரில்லை

புதுக்குடியிருப்பிலுள்ள குழந்தை யேசு ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியால் பயணம் செய்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு அருகாமையில் வேணாவிலுக்குச் செல்லும் வீதியும் புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும், குழியுமாகவுள்ளது. இதனால் இவ்வழியால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (08)

## கிளி/கிளிநொச்சி ம.வி(கனிஷ்டா)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

**காலம்:-16.03.2005 புதன் மாலை 3.00 மணி**

இந்த வித்தியாலயத்தில் கல்விகற்று வெளியேறிய அனைவருக்கும்! பல்வேறு பொறுப்புக்களிலும், பணிகளிலுமுள்ள தங்களுக்கு நேரத்தை ஒதுக்கி கொள்வதென்பது இயலாத காரியமேயாயினும் இந்த வித்தியாலயத்தின் எதிர்கால வளர்ச்சி பற்றி எல்லோரும் சேர்ந்து சில நிமிடங்கள் சிந்திப்போம். தவறாது வாருங்கள்.

அதிபர்,
கிளி/கிளிநொச்சி ம.வி

(சி.11557)

## முக்கிய அறிவித்தல்

**முல்லை.மாவட்ட அனைத்துப் பிரதேச அழகக சங்கங்களின் நிலய உரிமையாளர், பணியாளருக்கான முக்கிய கலந்துரையாடல்**

*முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையில் கட்டண விபரம் உயர்த்துவது தொடர்பாகவும், நிர்வாகம் சம்பந்தமாகவும் கலந்துரையாட இருப்பதனால் அன்றைய தினம் அனைத்து நிலையங்களையும் மூடி உரிமையாளர்களையும், பணியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**காலம்:-18.03.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு**
**இடம்:- ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறை செயலகம் கற்சிலைமடு**

சி.சிவகுமாரன்.,
செயலாளர்.
முல்லை.மாவட்ட அழகக சங்கங்களின் சமாசம்.

(சி.11563)



## தாடி மாஸ்ரர்

சோதிடர், தாடி மாஸ்ரர் இல 53, அண்ணாவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. மத்திய கல்லூரிக்கு எதிராக வெளிநாட்டு ஜாதகம் எழுதவும், சோ.திடம் சம்பந்தமான சகல விடயங்களையும் அறிந்து கொள்ளலாம். (வீடு,கிணறு)

(5789)

# அறிவித்தல்

## வவுனியா வடக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களை அழித்தல்

எமது பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளுக்கு எதிரே சொல்லப்பட்ட இடங்களில் காணப்படும் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

| திகதி | | இடம் |
|---|---|---|
| 16.03.2005 | – | மதியாமடு,சன்னாசி பரந்தன்,சின்னப்பூவரசங்குளம், அனந்தர் புளியங்குளம். |
| 17.03.2005 | – | சின்னடம்பன், பெரியமடு,நயினாமடு,கரப்புக்குத்தி |
| 21.03.2005 | – | குளவிசுட்டான்,மாறாவிலுப்பை,16ஆம் கட்டை. |
| 22.03.2005 | – | நெடுங்கேணி வடக்கு,நெடுங்கேணி தெற்கு,மாமடு. |
| 23.03.2005 | – | ஒலுமடு,மருதோடை,பட்டிக்குடியிருப்பு. |

எனவே மேற்படி உங்கள் வீட்டு வளர்ப்பு நாய்களைக்கட்டிவைத்து வளர்க்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் வீட்டு வளர்ப்பு நாய் வீதிக்கு வந்து எமது நடவடிக்கையின் போது இறக்க நேரிட்டால் அதற்கு வவுனியா வடக்குப் பிரதேசசபை பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

க.ஞா. அகஸ்ரீன்
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேசசபை.

(சி.11561)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் நியாப் திட்ட வேலைகளை முடிவுறுத்தல் தொடர்பான கலந்துரையாடல்

நியாப்-I திட்டமானது (2001,2002, 2003 ஆம் ஆண்டுகளுக்கானது) முடிவுறும் தறுவாயை அடைந்துள்ளதால் இத்திட்டத்தின் மூலம் நடை முறைப்படுத்தப்படும் வேலைகளில் இதுவரை முடிவடையாதிருக்கும் வேலைகள் சம்பந்தமாகவும், முடிவடைந்த வேலைகளின் உடனடிப் பராமரிப்புச் சம்பந்தமாகவும், ஜீவனோபாய ஆதாரக்கடன் திட்டத்தின் மீள் சுழற்சி நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

மேலும் நியாப்-I திட்டத்தின் முடிவுறுத்தல் அறிக்கை தயாரிப்பதற்காக உலக வங்கியின் விசேடகுழுவின் வருகையை முன்னிட்டு சகல பொது அமைப்புக்களின் கணக்குகளும் பரிசீலித்து கணக்காய்வு செய்யவேண்டியுள்ளது.

எனவே தயவு செய்து சகலபொது அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் உங்களால் பராமரிக்கப்படும் கணக்குப் புத்தகங்களுடனும், வங்கிக்கணக்குப் புத்தகத்துடனும் 18.03.2005 வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகத்தில் அமைந்துள்ள நியாப் திட்டப்பணிமனையில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி.ச.சு.சிவகுமார்,
பிரதித்திட்டப்பணிப்பாளர்,
நியாப்-முல்லைத்தீவு

(சி.11565)



கர்நாடகம், கோவை மராட்டி, ஒரிசா ஆகிய மாநிலங்களில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. நள்ளிரவில் நில நடுக்கம் ஏற்பட்ட பிரதேசம் ஒன்றில் இருந்து மக்கள் பீதியுடன் வெளியேறுவதைக் காணலாம்.

# "சோனியா நாட்டின் மிகப்பெரிய கிரிமினல்" எதிர்க்கட்சி உறுப்பினர் பேச்சு; சபையில் குழப்பம்

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியாகாந்தியை நாட்டின் மிகப்பெரிய கிரிமினல் என்று தேசிய சனநாயகக் கூட்டணி உறுப்பினர் பேசியதால் மக்களவையில் பெரும் அமளி துமளி இடம்பெற்றது. காங்கிரஸ் கட்சியினர் தே.ஜ கூட்டணியினரைத் தாக்கவும் முற்பட்டனர்.

மக்களவை நேற்று முன்தினம் கூடியபோது பாரதிய ஜனதாக் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய ஜனதாத் தளக்கட்சியைச் சேர்ந்த பிரபுநாத்சிங் பேசுகையில; பீகார் சட்டசபைக்கான மூன்றாம் கட்டத் தேர்தல் நடைபெற்ற போது பீகாரின் சில மாவட்டங்களில் தான் நுழைய அனுமதிகப்படவில்லை என்று ஆளும் கட்சியினரைக் குற்றம் சாட்டிய போது ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு பிரபுநாத்சிங் ஒரு கிரிமினல் பேர்வழி அதனால் தான் குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களிலும் நுழைய அனுமதிக்கப்படவில்லை என்று கூறினார். இதன் போது பிரபுநாத் சிங் பதிலுக்காக மற்ற எல்லாரையும் விட இந்தியாவிலேயே மிகப் பெரிய கிரிமினல் சோனியா காந்திதான். அவர் இந்த நாட்டிலிருந்து சிலைகளைக் கூடக் கடத்தியிருக்கிறார் என்று ஆவேசமாகக் கூறினார்.

இதன்போது சோனியாகாந்தி ஆளும் கட்சியின் முன்வரிசையில் இருந்து இவரது பேச்சைக் கேட்டு சிரித்தபடியே அருகிலிருந்த இராணுவ அமைச்சர் பிராணப்முகர்ஜியிடம் பேசிக் கொண்டிருந்தார். இருந்தும் இதனால் ஆத்திரமடைந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எழுந்து பா.ஜ.உறுப்பினர்களைத் தாக்க முனைந்தனர். இவர்களைக் காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சமாதானப்படுத்தினர். தொடர்ந்து கடுமையான வாய்த்தர்க்கத்தில் இரு கட்சியினர்களும் ஈடுபட்டதினால் பாராளுமன்றத்தை சபாநாயகர் ஒத்தி வைத்தார். மீண்டும் மதிய இடைவேளையின் பின்னர் பாராளுமன்றம் கூடிய போது பிரபுநாத்சிங் சோனியா பற்றிக் கூறிய வார்த்தைகள் அவையின் மரபுகளுக்கு எதிரானது. இதனை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் எனக் காங்கிரஸ் கட்சியினர் கோசமெழுப்பினர். இதற்கு சபாநாயகர் உடன்பட்டதால் நிலைமை வழமைக்குத் திரும்பியது.


வீரவணக்கம்



மேஜர்–நவக்குமார்

கதிரவேலு–சந்திரமோகன்

நல்லூர்–பூநகரி

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)

14. 03. 2005 அன்று விழுப்புண் தாக்கம் காரணமாக வீரச்சாவடைந்துள்ளார்.

நல்மனங்கொண்ட நாயகனே!
நவக்குமார்–
பற்பல களங்கண்டு...
வெற்றி கொண்ட வீரமறவனே.
உந்தன் சிறகுகள் ஓடிந்ததோ
உயிர்த்துடிப்புத்தான் ஓய்ந்ததோ
உந்தன் இதயம் ஒருமுறை துடிக்காதா
எங்கள் ஏங்கும் குரலை கொஞ்சம் கேட்காதா.

போராளிகள்,

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

(5857)


# நக்சலைட்டுக்களின் வன்முறைகளைத் தடுக்க மன்மோகன்சிங் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் -எல்.கே.அத்வானி கோரிக்கை

ஆந்திர மாநிலத்திலே அதிகரித்திருந்த நக்சலைட்டுக்களின் பிரச்சினைகள் வேறு சில மாநிலங்களிலும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.இதனைத் தீர்ப்பதற்கு பாதிக்கப்பட்ட மாநிலங்களுடன் பிரதமர் மன்மோகன்சிங் கலந்தாலோசிக்க முன் வரவேண்டுமென பா.ஜ.க தலைவர் எல்.கே அத்வானி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜார்க்கண்ட், கோவா ஆகிய மாநிலங்களில் சனநாயக நெறி முறைகளுக்கு மதிப்பளிக்க காங்கிரஸ் கட்சியும், இடது சாரிக்கட்சிகளும் தவறிவிட்டன. பா.ஜ.கட்சியை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைததவிர எந்தக் கொள்கைகளும் இக்கட்சிகளுக்கு இல்லை.சனநாயக நடைமுறைகளுக்கு எதிராகச் செயற்படுவது காங்கிரஸ் கட்சியின் வழமையான கொள்கையாகிவிட்டது எனவும் தெரிவித்த அவர், தொடர்ந்து தெரிவிக்கும் போது அரசியல் நோக்கங்களுக்கு ஆளுநர்களைப் பயன்படுத்தும் முறையற்ற செயலை மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கூட்டணி அரசு கைவிட வேண்டும்.இத்தகைய முறையற்ற செயலானது நமது நாட்டின் சனநாயக நடைமுறைகளுக்கு எதிரானது என்பதை காங்கிரஸ் உணர்ந்து கொள்ளவேண்டும். அதேவேளை ஆந்திராவில் நக்சலைட்டுக்களை அடியோடு ஒழிக்க ஆக்கபூர்வமான கொள்கையை வகுப்பது குறித்தும் முடிவு செய்ய வேண்டும் எனவும் அத்வானி கேட்டுக்கொண்டார்.


## வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார திணைக்களங்களில் உள்ள துணை மருத்துவசேவை வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பயிலுநர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்-2005

நிமிர்த்தும் க.பொ.த (உ/த)பரீட்சையின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. மருந்தாளர்
02. வைத்திய இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர்.
03. பௌதீக சிகிச்சையாளர்.
04. எக்ஸ் கதிர் இயக்க தொழில்நுட்பவியலாளர்.
05. பொதுசன சுகாதார இரசாயனகூடவியலாளர்.
06. மருந்துக் கலவையாளர்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2005. 04. 06 ஆகும். இதற்கான சுற்றுநிருபத்தினை கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி த. சத்தியமூர்த்தி,
மா. சு. சே. பி. பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.11393)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சிக் கிளை

SRI LANKA RED CROSS SOCIETY

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு (மே-08) இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினரால் கிளிநொச்சி மாவட்டப்பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் "செஞ்சிலுவைச் சங்கம்" பற்றிய அறிவை மதிப்பிடும்

### போட்டிப்பரீட்சை

* பரீட்சையில் தரம் 8 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.
* பரீட்சை எதிர்வரும் 03. 04. 2005 ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் 11. 00மணிவரை கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
* விண்ணப்பப்படிவங்களை அருகிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்களில் பெற்று எதிர்வரும் 25. 03. 2005 ஆம் திகதிக்கு முன்பு அவ் அலுவலகங்களிலேயே சமர்ப்பிக்கவும்.
* பரீட்சையில் முறையே 1 ஆம்,2 ஆம்,3 ஆம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும்,சான்றிதழ்களும் எதிர்வரும் உலக செஞ்சிலுவை தினமான 08. 05. 2005 அன்று வழங்கி கௌரவிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு

பரப்புரை/தகவற் பிரிவு
இ.செ.ச,கிளிநொச்சி.

தலைவர்/செயலாளர்
இ.செ.ச,கிளிநொச்சி.

(சி.11394)

# கொல்கத்தா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹர்பஜன், அப்ரிடி அணியில் இடம்பிடிப்பர்

இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகும் பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் ஹர்பஜன்சிங் பங்கேற்பார் என அணியின் பயிற்றுநர் ஜோன்ரைட் தெரிவித்துள்ளார்.

மொகாலியில் நடைபெற்ற முதலாவது போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தமை அவரின் தேவையை உணர்த்தியிருப்பதாகவும் கூறியுள்ளார். கொல்கத்தாவில் முன்னர் நடைபெற்ற நான்கு போட்டிகளில் அவர் 29 விக்கெட்டுக்களை வீழ்த்தி 18.8 என்ற சராசரியைப் பெற்றிருப்பதையும் ரைட் குறிப்பிட்டார்.



கடந்த சில காலமாக அவரின் பந்துவீச்சில் புகார்கள் கிளப்பப்பட்டு தற்போது சர்வதேச கிரிக்கெட்சபைஅவரின் தூஸ்ரா பந்து வீச்சை அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடன் அனில் கும்ளேயும்அணியில் இடம் பிடிப்பார். மொகாலியில் பிரகாசிக்கத் தவிறிய சகிர் கான் நீக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பாகிஸ்தான் அணியும் யுனிஸ் கானுக்குப் பதிலாக சயிட் அப்ரி டியை இணைக்கவேண் டும் என்றும் கொல்கத்தா ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கே சாதகமானதாகும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாணயச் சுழற்சியில் வென்றால் துடுப்பாட்டம்; கொல்கத்தா ரகசியம் இது



ஹர்பஜன், அனில் கும்ளே, டேனிஸ் கனேரியா போன்றவர்களுக்கு மகிழ்ச்சியான விடயம் கொல்கத்தா ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அருமையாக ஒத்துழைக்குமாம்.


மொகாலி டெஸ்ட் முடிந்து திரும்பியகங்குலி நேராக வீட்டுக்குக்கூடப் போகாமல் ,ஈடன் கார்டன் வந்து, ஆடுகளப்பராமரிப்பாளரைச் சந்தித்தார். ஆடுகளம் எப்படி இருக்கவேண்டுமென ஆலோசனை வழங்கியதாகவும் தெரிகிறது. இதை உறுதி செய்வது போல, ஈடன் கார்டன் ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஒத்துழைக்குமென அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது.

ஈடன் கார்டன் ஆடுகளப் பராமரிப்பாளர் பிரபீர் முகர்ஜி அளித்த பேட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கு வாய்ப்புக்கள் சற்று அதிகம். காரணம்,கடைசி சில தினங்கள் ஆடுகளம் சுழலுக்குச் சாதகமாக இருக்கும்.

நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாடும் அணி பெரிய ஓட்டங்களைப் பெறலாம். முதல் சில தினங்கள் வேகப்பந்து வீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் அனைவருக்கும் ஒத்துழைக்கும் ஆடுகளமாக இருக்கும்'' என்றார்.

சுழல் ஆடுகளம் என்பதால்,இந்தப் போட்டியில் இரு அணிகளும் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்க முடிவு செய்திருக்கிறன.

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கினார் முரளி



இலங்கையில் சுனாமியால் பதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஆதரவற்ற 214 சிறார்களுக்கு புலமைப்பரிசிலை (உதவித்தெகையை) இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் வழங்கினார்.18 வயதுவரை இச்சிறார்களுக்கான கல்விக்காக மாதாந்திர ரொக்கத்தொகை, மருத்துவ காப்புறுதி, பள்ளிச் சீருடைகள் மற்றும் உபகரணங்கள் இந்தப் புலமைப் பரிசிலில் அடங்கும்.

இலங்கை கிரிக்கெட்சபை ஆதரவில் இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.




# டேனிஷ் கனேரியா அணியின் வைரம்; புகழ்கின்றார் பயிற்சியாளர் வூல்மர்

டேனிஷ் கனேரியா அணியின் 'வைரம்' போன்றவர் என புகழ்கிறார் பாகிஸ்தான் பயிற்சியாளர் பாப் வூல்மர். மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் கனேரியா அற்புதமாக பந்துவீசினார். முதல் இன்னிங்சில் இவர் இந்திய அணியின் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். இவரது செயற்பாடு குறித்து திருப்தி தெரிவித்த வூல்மர் கூறுகையில்; "தற்போது உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவராக கனேரியா திகழ்கிறார். அவுஸ்திரேலியாவின் வோர்ன்,இந்தியாவின் கும்ளே ஆகியோருக்கு நிகராக பந்து வீசுகிறார். செயற்பாட்டின் அடிப்படையில் தான் புகழ் வந்து சேரும். இந்த வகையில் கனேரியா அணியின் நட்சத்திர வீரராகவுள்ளார். இவரை பாகிஸ்தான் பந்துவீச்சுத்துறையின் வைரம் என வர்ணிக்கலாம்'' என்றார்.

இத் தொடரில் இந்தியாவுக்குத்தான் அதிகவாய்ப்பு என்ற இன்சமாமின் கருத்தை ஏற்க மறுத்தார். வூல்மர்." இன்சமாம் கருத்து பற்றி எதுவும் தெரியாது. என்னைப் பொறுத்த வரை மொகாலி போட்டிக்குப்பிறகு, இரு அணிகளுக்கும் தலா 50 சத வீத வாய்ப்பு இருப்பதாக கருதுகிறேன்.

யூனிஸ்கான் போன்ற முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத போதும் கொல்கத்தா போட்டிக்கான அணியில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது.மொகாலி டெஸ்டில் விக்கெட் காப்பாளர் கம்ரான் அக்மல்அபாரமாகஆடினார். இதையடுத்தக் கூடுதலாக ஒரு பந்துவீச்சாளரைச் சேர்க்கும் வாய்ப்பு பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளது.



ஐந்து பிரதான பந்துவீச்சாளர்கள் இடம்பெற வாய்ப்புள்ளது. கொல்கத்தாவில் அதிகளவில் ரசிகர்கள் இருப்பது பாதிப்பைத் தராது. இங்கு கடந்த நவம்பரில் நடந்த ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி இந்தியாவை வென்றது.இது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக செயல்பட தேவையான மனவலிமையைத் தரக்கூடும்". என நம்பிக்கை தெரிவித்தார் வூல்மர்.

# கென்ய அணிக்கு டெஸ்ட் அந்தஸ்த்து ஐ.சி.சி. கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்

நாளையும் நாளைமறுதினமும் டில்லியில் நடக்கும் சர்வதேச கிரிக்கெட்சபை அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னரே இந்தியாவில் கென்ய அணி பங்குபற்றும் போட்டி விபரம் பற்றி அறிவிக்கப்படும் என தெரி விக்கப்படுகிறது.

கென்ய கிரிக்கெட் சபைக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய அதிகாரிகளுக்கும் சர்வதேச கிரிக்கெட்சபை அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெறும். இதன் போது அந்நாட்டு கிரிக்கெட்சபை அறிமுகப்படுத்தப்படும் இதன் போது கென்ய அணி பங்கு கொள்ளும் ஐந்து வருடங்களுக்கான பத்து நாடுகளுடனான போட்டி அட்டவணை தயாரிக்கப்படும். எனினும் அணி திறமையற்ற வீரர்களைக் கொண்டதாக இருக்குமா என்பது பற்றிக் கூறப்படவில்லை. எனினும் பங்களாதேஷ்,சிம்பாப்வே அணிகளைப் போன்று குறைவான டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த சனவரி மாதம் சபை கலைக்கப்பட்ட பின்னர் எந்தவொரு சர்வதேசப் போட்டிகளிலும் அணி பங்கேற்கவில்லை. அதுகடைசியாகச் சந்தித்த தொடர் கடந்த ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற ஐ.சி.சி மினி உலக கிண்ணப் போட்டியாகும்.

# யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை நடாத்தும் மாபெரும் கால்பந்துப் போட்டி இன்று ஆரம்பம்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப்பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் யாழ்ப்பணம் உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளைச் சேர்ந்த 57 முன்னணிக்கழகங்கள் கலந்து கொள்கின்றன.

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அ.பிரிவில் 15 கழங்களும் ஆ,இ,ஈ, பிரிவுகளில் தலா 14 கழகங்களும் இடம்பெற்றுள்ளன. போட்டிகள் யாவும் விலக்கல் முறையில் இடம்பெறவுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக்கச்சி வி.கழகம், முல்லை வி.க, கிளிநொச்சி ஸ்கந்தா வி.கழகம் மற்றும் தென்மராட்சி விளையாட்டுக் கழகமும் முதல் தடவையாக இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றமையும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:- வலிகாமம் லீக்கைச் சேர்ந்த சில்வெஸ்ரர் வி.க, எதிர் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த யங்கம்பன்ஸ் வி.க, வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞான முருகன் வி.க, எதிர் யாழ்.லீக்கைச் சேர்ந்த பொற்பதி வி.கழகம். (41)

# கரைச்சிப்பிரதேச கபடிப்போட்டி

## ஜொனி,உழவர் ஒன்றிய அணிகள் சம்பியன்

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டியின் இரண்டாம் நாளாகிய நேற்று கபடிப் போட்டி கிளி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது.



நேற்றைய கபடிப்போட்டியில் ஆண்கள் அணியில் இறுதிப் போட்டிக்கு ஜொனி விளையாட்டுக்கழக அணியும், வான தாரகை விளையாட்டுக்கழகமும் தெரிவாகியிருந்தது.இதில் ஜொனி அணியினர் 56 புள்ளிகளையும், வனதாரகை அணியினர் 12 புள்ளிகளையும் பெற்று ஜொனி அணி வெற்றி பெற்றுள்ளது.

அடுத்து பெண்கள் அணியில் இறுதிப்போட்டிக்கு உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியும், இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியும் தெரிவாகின. இதில் உழவர் ஒன்றிய அணி 36 புள்ளிகளையும், இளந்தளிர் அணி 31 புள்ளிகளையும் பெற்று உழவர் ஒன்றிய அணி வெற்றி பெற்றுள்ளது.



நேற்றைய கபடிப் போட்டிகளுக்குத் தீர்ப்பாளர்களாக பி.சாண்டைஸ், க.கலாதரன், சி.மனோன்மணி, வே.சிவநேசன், ப.ஆனந்தராஜா ஆகியோர் கடமையாற்றினர். (கு)

# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி துணுக்காய் பிரதேச விளையாட்டுப்போட்டி


துணுக்காய்ப் பிரதேசத்தில்அண்மையில் நடைபெற்ற மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிருக்கான விளையாட்டுப்போட்டிகள் யோகபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் துணுக்காய்ப் பிரதேச விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் சசிகரசீலன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளை துணுக்காய் பிரதேச அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கெ.புனிதன் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் இறுதிநாள் விளையாட்டுப் போட்டிகளில் மகளிருக்கான போட்டியில், கரப்பந்தாட்டத்தில் வண்ணன் விளையாட்டு கழகம் முதலாம் இடத்தையும், வாணி வி.க இரண்டாம் இடத்தையும், வலைப்பந்தாட்டத்தில் மல்லாவி மத்திய வி.க முதலாம் இடத்தையும், வண்ணன் வி.கஇரண்டாம் இடத்தையும்,மகளிர் கபடி விளையாட்டில் வண்ணன் வி.கமுதலாம் இடத்தையும், பூபாலினி வி.க இரண்டாம் இடத்தையும், கயிறு இழுத்தல் போட்டியில் பூபாலினி வி.க.முதலாம் இடத்தையும், வண்ணன் விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. இதேவேளை மகளிருக்கான மரதன் ஓட்டப் போட்டியில் 13 வயதுடைய ஐயன் குளத்தைச் சேர்ந்த யோ. கார்த்திகா (மாணவி) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் நடைபெற்ற மகளிர் தினவிழாவில் வழங்கப்பட்டன.

# போட்டிகள் ஆரம்பம்

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச விளையாட்டுக்கழக உத்தியோகத்தர் ச.குமார் தெரிவித்துள்ளார்.

முதல் நிகழ்வாக மென்பந்து கிரிக்கெட் போட்டி உடுப்புக் குளத்தில் அமைந்துள்ள அலை ஓசை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து கரப்பந்து, வலைப்பந்து, கபடி, எல்லே, உதைபந்து போன்ற முக்கிய போட்டிகளும் தொடர்ந்து நடைபெறவுள்ளதெனவும் போட்டிகளில் கலந்து கொள்ளும் கழகங்கள் கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். (20)

## சிந்தனைக்கு



நாம் ஒன்றுபட்ட மக்களாக- ஒரே தேசிய சக்தியாக- அணி திரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# பொறுமையின் எல்லையில்...!

அண்மைக்கால யாழ்.குடாநாட்டுச் சம்பவங்கள் தமிழ் மக்கள் பொறுமை இழந்து வருகின்றனர் என்பதையே எடுத்துக்காட்டுவதாயுள்ளன. அதாவது சிறிலங்கா ஆயுதப்படையினருக்கெதிராக தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கத் தொடங்கியுள்ளமையே இங்கு குறிப்பிடப்படும் விடயமாகும்.

அண்மையில் யாழ்.குடாநாட்டு மக்கள் ஏதோ ஒரு சம்பவத்தின் அடிப்படையில் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராகப் போராட வீதிகளில் இறங்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக கடந்தவாரத்தில் மட்டும் யாழ்.நகர்ப்பகுதியும், அதனைச் சூழவுள்ள பகுதிகளும், சாவகச்சேரி, நீர்வேலி மற்றும் துன்னாலை ஆகிய இடங்களிலும் மக்கள் இராணுவத்திற்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.

இவை காரணிகள் எதுவும் அற்ற விதண்டாவாத நடவடிக்கைகள் அல்ல. சிறிலங்கா ஆயுதப்படையினரின் வாகனங்கள் அப்பாவி மக்களை மோதிக்கொன்றமை, பெண்கள் மீதான பாலியல்வல்லுறவு முயற்சிகள் போன்றவை இவற்றிற்குக் காரணங்களாக அமைந்தவையாகும். ஆனால் மக்களின் இக்கிளர்ச்சிக்கான உந்துதலானது இச்சம்பவங்கள் காரணமாக மட்டும் ஏற்படுவதாக முடிவு கட்டுதல் தவறானதாகவே இருக்க முடியும்.

அதாவது கிளர்ச்சிகளும், எதிர்ப்புக்களும் அன்றைய சம்பவங்களின் விளைவுகளாக இருப்பினும் கூட இவ் எதிர்ப்பிற்கான அடிப்படை, உள ரீதியிலான நீண்ட மனக் கொதிப்பின் காரணமாக எழுந்தவையே ஆகும். அதாவது மக்கள் தாம் அடக்கி வைத்த உளக்கொதிப்பை வெளிக்காட்டுவதற்கானவை எனக் கூறுவதும் மிகையாகமாட்டாது.

விபத்துக்கள் என்பது எதிர்பாராத நிகழ்வுகள் என விவாதிக்கத் தக்கதாயினும் சிறிலங்கா இராணுவ வாகனங்கள் தமிழ்மக்கள் மீது மோதுவதென்பது எதிர்பாராத வகையிலான நிகழ்வுகள் அல்ல. அவை பொறுப்பற்றதும் மோதினால் என்ன? என்ற அகம்பாவத்தின் பாற்பட்டதுமாகும். அதாவது ஆக்கிரமிப்பாளரின் மனோபாவமாகும். இது ஒடுக்குமுறையின் ஒருவடிவமாக இருப்பதன் காரணமாகவே மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வீதிகளில் இறங்க வேண்டியதாகிவிட்டது.

விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி மூன்றாண்டுகள் கழிந்துள்ளன. இக்காலகட்டத்தில் பெரும் மோதல்கள் இடம் பெறவில்லையே ஒழிய துப்பாக்கிகள் முற்றாக முடக்கி வைக்கப்பட்டவையாக இல்லை. இடையிடையே வேட்டுச்சத்தங்கள் கேட்காமலும் இல்லை.

அத்தோடு யுத்தநிறுத்த உடன்பாட்டின் ஓரங்கமாகவுள்ள புரிந்துணர்வு நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு பெரும் அக்கறையை வெளிக்காட்டியதாக இல்லை. அதாவது சிறிலங்கா அரசு மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. ஏனெனில் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றிவிப்பதற்கான நடவடிக்கையானது இராணுவத்தை முடக்குவதாகிவிடும் எனச் சிறிலங்கா அரசு கருதுவதே காரணமாகும்.

ஆனால் இது பொதுமக்களைப் பொறுமையின் எல்லைக்கே கொண்டு சென்றுள்ளது என்பதையே தற்போதைய நிகழ்வுகள் வெளிப்படுத்துபவையாக உள்ளன. சிலவேளைகளில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பின் இத்தகைய நிலைகள் ஏற்படாமல் கூட இருந்திருத்தல் கூடும்.

ஏனெனில் ஒரு புறத்தில் தற்செயலாக ஏற்பட்ட சம்பவம் என்ற பார்வையில் மக்கள் குறை குற்றங்களை மறந்து பொறுமை காப்பதற்கான வாய்ப்பு இருந்திருக்கும். அதுமட்டுமல்ல, இராணுவ வாகனச் சாரதிகளும் அகம்பாவமும், பொறுப்பற்ற தனமும் மாறி சட்ட ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டவர்களாகமாறியிருக்க முடியும்.

ஆனால் அரசாங்கமோ அத்தகைய நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாக இல்லை. தமிழ்மக்களை இராணுவப்பிடிக்குள் வைத்துக்கொள்ளவே அது பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபடுகின்றது. இதற்கு எதிராகத் தமிழ்மக்கள் குரல்எழுப்பிய போதும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறுவதாக இல்லை.

இந்நிலை காரணமாகவே இராணுவத்தினருக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடு தீவிரம் அடைந்துள்ளதோடு ஆக்கிரமிப்பாளர்களின் ஒடுக்குமுறைச் செயல்களுக்கும், அடாவடித்தனமான செயலுக்கும் எதிராக மக்கள் வீதிகளில் இறங்க வேண்டியதாகியுள்ளது.

சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளக்கூடிய மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்குத் தெரியாததல்ல. இவற்றைக் கடந்த காலத்தில் அவர்கள் அனுபவித்தவர்களே. ஆயினும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்குத் தயாராகிவிட்டனர் என்பது அவர்கள் பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டனர் என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. அதாவது தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பானது தனியாக ஒரு சம்பவத்துடன் மட்டும் தொடர்புபட்டதல்ல. தமிழ்மக்கள் மீதான ஒட்டு மொத்த அடக்குமுறைக்கும் எதிரான வெளிப்பாடு என்பதைச் சிறிலங்கா அரசு புரிந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் இதன் விளைவுகள் எதிர்காலத்தில் பாரதூரமானதாகிவிடும்.

# இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அரச படையினர் இருக்கின்றனர்

### -கிளி.அ.சா.நி.ஒன்றியம் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம்

இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அரச படைகள் இருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இக் கடிதத்தில் சமாதான ஒப்பந்தத்தின் பின்பு சமாதானமாகவும் நிம்மதியாகவும் வாழமுடியுமென நம்பிய எமக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதோடு பயமும் தோன்றி வளர்ந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த மாதத்தில் சிறிலங்காப் படையினராலும், அதன் கைக் கூலிகளாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தாக்குதல்கள், பாலியல் வல்லுறவு முயற்சிகள் என்பனவற்றைச் சுட்டிக் காட்டியுள்ள அக்கடிதம் சமாதானத் தளம் உடைந்து விடுமோ என அஞ்சுவதாகவும் தெரிவித்துள்ளது.

சம்பவங்கள் நடப்பதும், இராணுவம் மக்களை மோசமாகத் தாக்குவதும், நாங்கள் உங்களிடம் முறையிடுவதும் ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இதுவரையும் நாங்கள் தந்த எந்த மகஜர்களுக்கும் தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பது கூடத் தெரியாமல் உள்ளோம். ஆனால் அரச படைகளின் அட்டூழியங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் எவ்வகையிலும் குறைந்த பாடில்லை. ஆகவே மக்கள் செறிந்து வாழும் இடங்களை விட்டு இராணுவம் வெளியேறினால்தான் மக்கள் துன்பமில்லாமல் சந்தோசமாக நீங்கள கூறுகின்ற சமாதானம் கிடைக்கவும், நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழமுடியும் எனத் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம் எனவும் தெரிவித்துள்தோடு.நடந்துவரும் சம்பவங்களால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு நிலைமை கட்டுக்கடங்காமல் போனால் எவருமே எதுவும் செய்ய முடியாமல் போகலாம். ஆகவே இராணுவத்தை மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேற்றி எம்மை நிம்மதியாக எமது மண்ணில் வாழத் தாங்கள் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமமென எமது இணையம் மிக அன்பாகக் கேட்டுக்கொள்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

# பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு உதவு தொகை வழங்கல்

முல்லை மாவட்ட கடற்றொழிலாளரின் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரால் சுனாமியால் தாயையும், தந்தையையும் இழந்த பிள்ளைகளுக்கும் தந்தையை இழந்த பிள்ளைகளுக்குமாக 84 பிள்ளைகளுக்கு உதவு தொகை வழங்கப்படவுள்ளது.

ரூபா பத்தாயிரம் வைப்பில் இட்ட வங்கிக் கணக்கு புத்தகம் இன்று காலை 9.00 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார். இதுவரை 49 பிள்ளைகளுக்கு இவ்வாறான உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஐ.ம.சு.மு.சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை ல.ச.ச.க தெரிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை தேர்ந்தெடுப்பது என லங்காசமசமாஜக்கட்சி நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்; அடுத்து நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தமது வேட்பாளரைத் தெரிவு செய்து பிரச்சார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து விட்டது. ஆனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரையும் வேட்பாளரைத் தெரிவு செய்யாததும், பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்காது இருப்பதும் முற்போக்குச் சிந்தனை உள்ள மக்கள் மனதில் கேள்வியாக உருவெடுத்துள்ளது. இந்த விடயங்கள் அனைத்தையும் கவனத்தில் எடுத்த நாம் பிரதமர் மகிந்தராஜபக்ஷவினை சனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய வேண்டுமென முடிவெடுத்தோம். எனத்தெரிவித்தார். (32)

# தனியார்துறை ஊழியர்களுக்கான புதிய நஷ்ட ஈட்டுத்திட்டம்

### -அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறது

ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனி அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள தனியார் துறை ஊழியர்களுக்கான புதிய நஷ்டஈட்டுத் திட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் அத்தாவுட செனவிரட்ண தெரிவித்துள்ளார். உலகில் வேறெந்த நாட்டிலும் தனியார் துறை ஊழியர்களுக்கு இவ்வளவு நஷ்டஈட்டுத் தொகை வழங்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் அரசாங்கம் தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கும் பெரும் வரப்பிரசாதமாக இதனைக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (32)

### -அப்புத்தளைப்பகுதியில்-

# வங்கிக் கொள்ளையர்கள் ஆயுதங்களுடன் கைது

அப்புத்தளை ஹல்துமுல்ல வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட மூவரைப் பொலிசார் ஆயுதங்களுடன் கைது செய்துள்ளனர். கடந்த பத்தாம் திகதி ஹல்துமுல்ல மக்கள் வங்கி கொள்ளையிடப்பட்டது. அந்தச் சம்பவத்தின்போது கொள்ளையர்களால் வங்கிக் காவலர்களின் ஆயுதங்களும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து இந்தக் கைதை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.'

# ஒருவருடத்துக்கு ஐ.தே.க வுடன் இணைந்து செயற்பட சனாதிபதி முயற்சி

### -ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர்களுடன் பேச்சு

ஒருவருட காலத்திற்கு இணைந்து செயற்படும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களுடன் சனாதிபதி இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கியதேசியக்கட்சியின் முக்கியஸ்தர்களை சனாதிபதி மாளிகைக்கு அழைத்து ஒருவருட காலத்திற்கு இணைந்து செயற்படுவதற்கும். சனாதிபதி முறையை அகற்றுவதற்கும் இணங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையே ஐக்கியதேசியக்கட்சியின் இந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோத மின் பாவனைக்கு பத்தாயிரம் ரூபா தண்டம்

மன்னார் உயிலங்குளம், உயிர்த்தராசன்குளம் பிரதான வீதியில் சட்ட விரோத மின்சாரத்தைப் பாவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பெண்கள் உட்பட ஒன்பது பேரை மன்னார்ப் பொலிசார் கைது செய்து நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். இதன்போது சட்ட விரோத மின்சாரத்தைப் பாவித்தார்கள் என்ற குற்றத்திற்காக தலா 10000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இதனை தவணைக்கு 1000 ரூபாய் வீதம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(18)

# பிக்குகளின் உண்ணாவிரதம் திருகோணமலையில் தொடர்கிறது

திருகோணமலையில் பௌத்த துறவிகள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப்பணிகளின் காலதாமதம் குறித்த அதிருப்தியை வெளிப்படுத்து முகமாகவே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தாம் போராட்டத்தை நிறைவு செய்ய வேண்டுமானால் சனாதிபதி இதில் தலையிட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (32)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ். குடாநாட்டிற்கு நேற்று விஜயம்

## -சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட கனடாவிலிருந்து திருமதி, மினா மரியா தலைமையிலான நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒரு செனட்சபை உறுப் பினர் உட்பட இருபத்தைந்து பேர் கொண்ட குழு நேற்று யாழ் குடா நாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டது.

இவர்களுடன் கனடாவுக்கான இலங்கைத் தூதரகத்தைச் சேர்ந்த சில்வா, தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ் வர்த்தகர்களும் விமானம் மூலம் யாழ். பலாலி விமான நிலையத்தை முற்பகல் வந்தடைந்தனர்.

அங்கிருந்து நேரடியாக வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மணற்காடு கிராமத்துக்குச் சென்று அங்கு ஆழிப் பேரலையால் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டதுடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள் தொடர்பாக அக் கிராம மக்களுடன் கலந்துரையாடினார்கள்.

தொடர்ந்து நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் பருத்தித்துறை பிரதேசத்திற்கு வந்தடைந்த பாராளுமன்ற உறுப்பினர் மினா மரியா தலைமையிலான குழுவினர் சுனாமி அனர்த்த கூட்டுச் செயலணிக்கு வருகைதந்தனர்.

அங்கு செயலணிப் பொறுப்பாளர் பாலையா, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகளையும் சந்தித்து ஆழிப்பேரலையால் ஏற்பட்ட இழப்புக்கள், நிவாரணப்பணிகள், புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக இரண்டு மணிநேரம் கலந்துரையாடினார்கள்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணநடவடிக்கைகள், குடியேற்றம், மீளத் தொழில்களை ஆரம்பித்தல் ஆகியவற்றுக்கு எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக செயலணிக் குழுப் பொறுப்பாளர் பாலையா, சமாச பிரதிநிதி குட்டித்தம்பி, யாழ். மாவட்டகடற்றொழிலாளர் சங்க சமாச செயலாளர் சூரியகுமாரன் ஆகியோர் கனேடிய குழுவினருக்கு விளக்கிக் கூறினார்கள்.

இக் கலந்துரையாடலின் போது உரைநிகழ்த்திய கனடாவின் முன்னாள் அமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் இக் குழுவுக்கு தலைமை தாங்கி விஜயம் செய்தவருமான மினா மரியா, இலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு வதற்கென கனடா அரசு (425) நானூற்றி இருபத்தைந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது

அந்த நிதி இன்னமும் வழங்கப்படவில்லை அந்நிதி பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும் வகையில் சிறுவர் பாதுகாப்பு நிதியம், உலக உணவு நிறுவனம், ஆகியவற்றினூடாக வழங்கப்படும் எனத்தெரிவித்தார்.

தொடர்ந்து சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா வர்த்தக சமூகம் உதவிகளை புரிய முன்வந்துள்ளது. எனவே தமது அரசும் உதவிகளை வழங்குமெனவும் தெரிவித்தார். (கா)

# அம்பாறையில் 130 தற்காலிக குடியிருப்புகள் த.பு கழகத்தால் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் பேரழிவுகளுக்குள்ளாகி தங்களது வாழ்விடங்களையும், வாழ்வாதாரங்களையும் இழந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்குத் தற்காலிகக் குடிமனைகளைத் தமிழர் புனர்



வாழ்வுக் கழகம் அமைத்து வருவதோடு அவ்வப்போது மக்களைக் குடியமர்த்தி அவர்களது தேவைகளையும் நிவர்த்தி செய்துவருகின்றது.

இந்த வேலைத்திட்டப் பணிகளின் மற்றுமொரு தொடர் நடவடிக்கையாக கடந்த 12 ஆம் திகதியன்று மூன்று குடியிருப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அம்பாறையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. காரைதீவு மூன்றாம் குறிச்சியில் 30 குடிமனைகளும், காரைதீவில் 70 குடிமனைகளும், ஆலையடிவேம்பில் 30 குடிமனைகளுமாக மொத்தம் 130 தற்காலிகக் குடிமனைகளைக் கொண்ட மூன்று குடியிருப்புக்கள் தமிழர்புனர் வாழ்வுக் கழகத்தால் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (கு)

# வவு.வில் பெண்ணின் கொலை தொடர்பில் கணவனுக்குப் 18 வருட கடுழியச் சிறை

(செட்டிகுளம்)

வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி தனது மனைவியை அடித்துக் கொலை செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட கந்தன் நல்லையா என்பவருக்கு எதிரான கொலை வழக்கு விசாரணைகளில் குற்றச்சாட்டு நிருபிக்கப் பட்டதையடுத்து எதிரிக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் 18 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளார். அத்துடன் 5000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன் தண்டப்பணம் செலுத்தத்தவறினால் மேலும்ஒரு வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தினசரி குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து மனைவியை அடித்துத் துன்புறுத்தி வந்த கந்தன் நல்லையா என்பவர்(வயது 38) அவரது மனைவியான ஆனந்தராணியின் டயறியில் இருந்து எடுத்த ஆண் ஒருவரின் புகைப்படம் யாருடையது எனக் கேட்டுத்துன் புறுத்தியதாகவும், சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவ தினத்தன்று காலை 11.00 மணியளவில் புகைப்படத்தில் காணப்பட்ட ஆண்யார் எனக்கேட்டு மனைவியை அடித்துச்சித்திரவதை செய்ததுடன் சுத்தியலால் அவருடைய தலையில் தாக்கியதாக நேரில் கண்ட அவருடைய மகளான நிவேதிகா தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து அயல்வீட்டிற்கு ஓடிச்சென்று அயலவராகிய பெண்ணிடம் சிறுமி இதுபற்றி தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அயல்வீட்டுப் பெண்மணி, தான் சென்று பார்த்த போது தண்ணீர் வேண்டுமெனக்கேட்ட இறந்தவரின் தலையில் இரத்தம் பெருக்கெடுத்ததைக் கண்டதாகவும், அவருக்குத் தண்ணீர் எடுத் வருவதற்காகச் சென்றபோது இறந்தவரை அவரது கணவர் கிணற்றில் தூக்கிப்போட்டு விட்டு அவர் கிணற்றில் விழுந்து விட்டதாக சத்தமிட்டதாகவும் தெரிவித்தார். அயலவர்களின் உதவியோடு கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட இறந்தவரின் உடலை மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதையடுத்து சந்தேகத்தின் பேரில் கணவன் கைது செய்யப்பட்டு விசாணைக்குட்படுத்தப்பட்டார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளில் கொலைக் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு மேல் விசாரணைக்காக வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது. எதிரியின் வேண்டுகோளுக்கமைய யூரர்கள் இல்லாத நிலையில் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் விசாரணைகளை நடத்தியதில் சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் அடிப்படையில் எதிரி சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்தக் கடுழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டது . (21)

## அடையாள...

களில் ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக மன்னார் பொலிசில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது. அந்த முறைப்பாட்டில் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியவர் கடற்படைச் சிப்பாயே எனத் தெரிவித்த அந்தப் பெண் அந்தச் சிப்பாயை அடையாளம் காட்ட முடியும் எனவும் தெரிவித்திருந்தார். அதற்கமைய மாவட்ட நீதவான் என்.எம். அப்துல்லா 24 கடற்படைச் சிப்பாய்களை அடையாள அணிவகுப்பில் ஆஜர்ப்படுத்துமாறு உத்தரவிட்டார். எனினும் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதாக முறைப்பாட்டைத் தெரிவித்த பெண்அனுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதன் காரணமாக மன்றிற்கு ஆஜராகாததால் நீதவான் அடையாள அணிவகுப்பை ஒத்திவைத்துள்ளார். (32)

# ஊடகத்துறை நிர்வாகப் பொறுப்புகள் மங்கள சமரவீரவிடம் பறிப்பு

ஊடக அமைச்சின் நிர்வாகப் பணிகள் அனைத்தும் சனாதிபதியின் தலைமையிலான விசேட குழு ஒன்றின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அமைச்சர் மங்கள சமரவீரவின் பொறுப்பின் கீழ் காணப்பட்ட ஊடக அமைச்சின் நிர்வாகப்பணிகள் உயர் பதவிகளுக்கான நியமனங்களைச் செய்தல், இடமாற்றங்களை வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களும் சனாதிபதியின் தலைமையிலான விசேட குழுவினாலேயே செய்யப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மக்கள் விடுதலை முன்னணிக்குச் சார்பாகச் செயற்படுவதாகப் பிரதி அமைச்சர்களின் அமைப்பு சனாதிபதியிடம் முறைப்பாடு செய்திருந்ததாகவும் அதற்கான நடவடிக்கையாகவே இந்தச் செயற்பாடு அமைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. இது தொடர்பாக மங்களசமரவீரவுடன் கலந்தாலோசிக்காமலேயே சனாதிபதி சந்திரிகா இந்த முடிவை எடுத்துள்ளார். மங்கள சமரவீரவின் கீழுள்ள நிர்வாகம் மிகச் சீர்கேடடைந்த நிலையில் உள்ளமையால் ஊடகத்துறையின் நிர்வாகப் பொறுப்புக்கள் சபை ஒன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மங்கள சமரவீரவுக்கு அறிவுறுத் தியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (32)

# 200 பேருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 200 பேருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தின் உதவியால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த யாழ். குடாநாட்டவர்கள் தமது இடம் பெயர்வின் பின் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறும் போது இருக்கும் நடைமுறைச்சிக்கல்களால் பிறப்புஅத்தாட்சிப் பத்திரங்களைப் பெற முடியாதிருந்தவர்களுக்கே இவ்வாறு பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. (33)

# பிணைக்கான காசோலை வழங்கல்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கு முன்னர் பிணைப் பணத்திற்கு விண்ணப்பித்து தேவைப் பட்டியலில் கையொப்பமிட்டவர்களுக்கு பிணைப்பணத்திற்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளதால் உரியவர்களை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றின் பதிவாளர் வ.மார்க்கண்டு தெரிவித்துள்ளார். (கா)

## சுனாமியால்...

கம் கரையோரப் பாதுகாப்புத் திட்டங்களை அமுல்செய்வதற்கு முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தெல்வத்தையில் சுனாமி அனர்த்தத்தில் இறந்துபோன 1850 புகையிரதப் பயணிகள் குறித்து உரிய ஆவணங்கள் பேணப்படவில்லையென அவர் குறிப்பிட்டார். நாட்டில் தற்சமயம் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதனால் 100 கோடிரூபா செலவு ஏற்படவுள்ளது. இதனைத் தவிர்த்து அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் ஒன்றுக்கு பத்துக் கோடி வீதம் பகிர்ந்தளிக்கலாமெனஆலோசனை வழங்கினார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இங்கு உரையாற்றுகையில், சனாதிபதி நிதியம், பிரதமர் நிதியம் ஆகியவற்றின் நிதிகள் காணாமல் போனமையானது வேடிக்கையானது எனக் குறிப்பிட்டார். சுனாமியின் பின்னர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 240 கொள்கலன் பொருட்கள் உரிய பாவனையின்றி வீணடிக்கப் பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

அதேநேரம் லண்டனில் வைத்துக் கருத்துரைத்த அமைச்சர் அநுர பண்டாரநாயக்க சுனாமி நிவாரணத்திற்குக் கிடைத்த நிதிகள் உரிய வகையில் பயன்படுத்தப் படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (32)

## சேனைக்...

நிர்வாக உத்தியோகத்தர் வீ.இராஜேந்திரம் திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தற்காலிகக் குடிமனைகளை திறந்து வைக்கும் நிகழ்வில் முதலாவது வீட்டினை கல்முனைப் பிரதேச செயலாளர் வாசுதேவன் திறந்து வைக்க, இரண்டாவது வீட்டினை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர் சிவராசா திறந்து வைத்தார்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி வே.கருணாகரன் உரையாற்றுகையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு தொடர்பான வேலைத்திட்டங்களை மேற் கொள்வதென்பது தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திற்கு புதியதொரு செயற்பாடல்ல. இதுபோன்ற எவ்வளவோ வேலைத்திட்டங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எமது தாயகப்பிரதேசத்தில் மேற் கொண்டுவருகின்றது. நாம் மக்களுக்கான புனர்வாழ்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எப்போதுமே பின்னிற்கப்போவதில்லையென்று அவர் குறிப்பிட்டதுடன், இதுபோன்ற செயற்பாடுகளுக்கூடாக எமது மக்களுக்கு வீடுகளைக் கையளிப்பதையிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தானும் பெருமைப்படுவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து கல்முனை தமிழ்ப்பிரதேச செயலாளர் வாசுதேவனும் உரையாற்றினார். இதனையடுத்து வீடுகளுக்கான திறப்புக்கள் அந்தந்த குடும்பத்தினரிடம்கையளிக்கப்பட்டன. (கு)

## அரசசார்பற்ற...

தொடர்பாக வெளிப்படைத்தன்மை காணப்படவேண்டுமெனவும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் நிதிவழங்கும் நிறுவனங்கள் வலியுறுத்தி வருகின்றமை தெரிந்ததே. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது